

# திறவுகோல்

2050 புரட்டாசி
மாத இதழ்

பப்பியம்மா சார்

---

ம(ரும)கள்

---

ஒளிரும் ஆசிரியர் - 5

செண்பக வனம்

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# அக்கா குருவி என்று அழைக்கப்படும் தங்கச்சி குருவி

அக்கா குருவி ஆம்..எனக்கு அக்கா இல்லாத குறையை தீர்த்த குருவி.

காவிரி கரை வாழ் மக்களுக்கு மிகவும் பரிச்சயமான குருவி..

ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இதற்கு ஒரு கதை உண்டு.

அதாவது அக்கா குருவியும் தங்கச்சி குருவியும் ஆத்தில் குளிக்க போனதாம். அப்போது வந்த வெள்ளத்தில் அக்கா குருவி அடித்து
செல்லப்பட்டதாம்.. அதை தேடுவதற்காகவே இந்த குருவி அக்கோவ் அக்கோவ் என்று கூவுகிறதாம்

மாட்டில் பால் கறப்பவர்கள் மட்டும் எழும் முற்காலை பொழுதில் சேவல் கூவும் முன்பே என் வீட்டு மூங்கி குத்தில் முழக்கமிடும் குருவி..

அதிகாலை அக்கோவ் சத்தத்திற்கும் 11 மணி அக்கோவ் சத்தத்திற்கும் நிச்சியம் வேறுபாடு உண்டு, குரலில் ஒரு களைப்பு தெரியும்

11 மணி வெயில் என்பதை எத்தனை பேர் உணர்வார்கள் என்று எனக்கு தெரியவில்லை.. மிகவும் ரம்மியமானது. அந்த 11 மணி வெயிலில் நிழல் படர்ந்த தோப்பில் அல்லது மரத்தில் கேட்கும் அந்த அக்கோவ் அக்கோவ்  என்னும் ஓசை நம்மை வேறு உலகத்திற்கு அழைத்து செல்லும்.

நான் பல நாள் நினைத்து பார்த்தது உண்டு .. அக்கா குருவிக்கு குடும்பம் உண்டா... அதற்கு ஏதும் கதை  உண்டா என்று..

மிகவும் கனமான துணியை கருங்கல்லில் துவைக்கும் போது நாம் வேகமாக சில தடவை அடிப்போம்..

ஒரு அடிக்கும் மறு அடிக்கும் உள்ள இடைவெளியில் இசைப்பாட்டாகவும் எதிரொலியாகவும்  அக்கா குருவி ஓசையை நான் கேட்டது உண்டு..

பள்ளி பருவம் முதல் இன்று வரை நான் செல்லுமிடம் எல்லாம் சென்னை வரை என் அக்கா குருவிகள் என்னுடனே வாழ்ந்து வருகின்றன...

ஒரு காலகட்டத்தில் எனக்கு அக்கா குருவி இல்லாமல் அன்றைய பொழுதே விடியாது...

அந்த அக்கோவ் ஓசைக்கு வேறு மொழியில் என்ன அர்த்தம் என்று தெரியவில்லை...
இருந்தாலும் பெரும் உரிமை நம்மையே சாரும்

ஆடி பட்டம் விதைக்கும் போது எல்லாம் அக்கா குருவிகள் திசைக்கு ஒன்றாய் கூக்குரலிடும்...

மழையில் நனைந்து... வெயிலில் வாடி.. குளிரில் கரைந்து வாழ்ந்த அக்கா குருவிகளின் சத்தம் நாளுக்கு நாள் அடங்கிக்கொண்டே வருகிறது..

இன்று நம் பூமியில் செயற்கையாய் ஏற்பதப்படும் வறட்சியை அக்கா குருவிகளால் தாங்க முடியவில்லை ..
நம்மை போலவே கதறி கதறி அடங்க தொடங்குகின்றன...

நான் மனதில் நினைக்கும் போது எல்லாம் ஒலிக்கும் என் அக்கா குருவிகள் இன்னும் சில வருடங்களில் இல்லாமல் போகுமோ என்ற கவலை வருகிறது..

இன்றும் பாமணி ஆற்று கரையிலும் ,கோரை ஆற்று கரையிலும் தேடி தவிக்கிறேன் என் அக்கா குருவிகளை..
தயவு செய்து கூவி எனக்கு ஆயுள் நீட்டிப்பு செய்யுங்கள் என் அக்காக்களே...

எது உங்களின் ஓசையை அடங்க செய்வது,காரணம் புரியாமல் தவிக்கிறேன் ,

மனிதரின் மனமா,
அவசர உலகத்தின் சுழற்சியா,
இயற்கையை கொண்டாடாமல் போன மனித நேயங்களா,
நாங்கள் உங்கள் ஆறுகளில் அள்ளிய மணலா,
நாங்கள் வெட்டி விற்கும் உங்கள் மரமா,
அழிக்கப்படும் மூங்கில் குத்தா,
பருவ மழையை மாய்த்து போக வைத்த மனிதர்களா,
எங்களை போல உங்களுக்கும் குடிநீர் பற்றாக்குறையா,

எங்களை போன்று உங்கள் உணவிலும் கலப்படமா,
காற்றில் மாசு ஏற்படுத்திய மாமேதைகளா,
நிலத்தடி நீரை காலி ஆக்கிய கடுங்கோலர்களா,
வெப்பத்தை அதிகரிக்க செய்து வேடிக்கை பார்ப்பவர்களா,
மரம் நடுவதை மறந்து போன தலைமுறையா,
மேகத்தை தூண்டும் மரங்களை அழிக்கும் மிட்டா மிராசுகளா,

பூமியை விட்டு நிலாவில் தண்ணீர் தேடும் தீர்க்கதரிசிகளா,
இந்த பூமி பந்து முழுவதும் மூடி இருக்கும் நெகிழி நிறைப்பான்களா,
எது நாகரிகம் என்று கூட தெரியாமல் வாழும் நவயுக நாயகர்களா,
அல்லது இந்த கேடு கெட்ட மனிதர்கள் வாழும் இடத்தில் நமக்கு என்ன வேலை என்று முடிவு எடுத்து விட்டீர்களா,,,

முடிவு எதுவாக இருப்பினும் திரும்பி வந்து விடுங்கள் என் அக்கா குருவிகளே..உங்கள் அக்காவாக நான் தவித்து கொண்டு இருக்கிறேன்.

ஒரு முறையேனும் கூவி விடுங்கள் அக்கோவ் அக்கோவ் என ....



- தினேஷ் குமார் மாரியப்பன்
டெல்டாகாரன்

## பூக்கள்!!

புன்னகையின் வெளிச்சம்!!
பெண் அவளின் பொக்கிஷம்!!
உணர்வுகளின் உந்து பொருள்!!
செடிகளின் அரசி!!
வெக்கத்தின் வேக்கை!!
காதல் தேன்!!
தெய்வங்களின் தேடல் பொருள்!!

பா.எழிலரசி,
புவியியல் துறை,
இளங்களை இரண்டாம் ஆண்டு,
அ.வீரைய வாண்டையார் நினைவு
ஸ்ரீ பூஷ்பம் கல்லூரி,
பூண்டி.

# பெண்கள் என்னும் தேவதைகள்

கடவுளால் படைக்க
பட்ட பொக்கிஷங்கள்...

தவம் இருந்தாலும்
பெற முடியாத வரங்கள்...

பிரம்மனால் செதுக்கப்பட்ட
சிற்பங்கள்...

குரும்பு தனம் கொண்ட
குழந்தைகள்...

எதையும் தாங்கும் வலிமை
கொண்டவர்கள்...

கவிஞனால் வர்ணிக்க முடியாத
வானத்து விண்மீன்கள்....

அருவியை போன்ற
அழகு படைத்த
அவதாரங்கள்....

மயில்கள் போல ஆடும்
கூந்தல் படைத்தவர்கள்....

அழகு தேவதைகள்....

அன்பாக பேசும்
ஆற்றல் கொண்டவர்கள்.....

ஆண்களின் முதுகெலும்பாய்
திகழ்பவர்கள்....

ஒர் உயிரை
சுமக்கும் பாக்கியம்
கொண்டவர்கள்....

எட்டாத உயரத்தையும்
எட்டி பிடிக்கும்

ஏணிப்படிகள்....
பல தடைகளையும்

உடைத்தெரியும்
பலசாலிகள்.....

ஆண்களுக்கு நிகராய்
திகழும் திறமைசாலிகள்....

சேலை உடுத்தும்
சிற்பங்கள்....

மறு பிறவி எடுக்கும்
மகராசிகள்....

பொறுமைக்கு இலக்கணமாய்
திகழ்பவர்கள்...

இந்தியாவின்
இரும்பு தூண்கள்....
பெண்கள்....

பெண்கள்
இவ்வுலகின்
பெரும்பாக்கியங்கள்.....



S.S. கார்த்திக், DME
உள்ளிக்கோட்டை

# களம் அமைப்போம்


அருள்பாண்டியன்

ஏன் எல்லாவற்றிற்க்கும் போராட்டம் என கேட்கும் பலருக்கு,
தங்களுக்கும் சேர்த்து தான் இந்த போராட்டம் என எவ்வாறு புரிய
வைப்பது,
எதை சொல்லி விளக்குவது?

இந்திய துணைக்கண்டத்தில் தமிழகத்திற்கு மட்டும் இழைக்கப்படும்
அநீதிகள் ஒன்றல்ல, இரண்டல்ல!

ஸ்டெர்லைட், நியூட்ரினோ, அணுகழிவு மையம்,மீத்தேன், ஷெல் காஸ்,
ஹைட்ரோகார்பன், தேசிய உணவு பாதுகாப்பு கொள்கை, உதய் மின் திட்டம், நீட்,
புதிய கல்வி கொள்கை இன்னும் ரகசியமாக பல திட்டங்கள்

இதெல்லாம் வளர்ச்சி திட்டம் என்கிறது மத்திய அரசு, ஆமாம் என்கிறது மாநில அரசு,
தெரியாமல் ஆதரித்தோம் என்கிறது எதிர்க்கட்சிகள், வாய் திறக்காமல் பல
அமைப்புகள்!

யார் தான் கேட்பது, யார் தான் போராடுவது,
எனக்கென்ன என்று தத்தமது வேலைகளை மட்டும் செவ்வனே செய்யும் இவர்கள்
பணம் இருந்தால் போதும்
என்ற நோக்குடன் செயல்படுகின்றனர்,

பணத்தின் மூலம் பொருள்களை வாங்கலாம்,
சுத்தமான வாழ்வியல் சூழலை வாங்க முடியாது என்பதை இங்கு அவர்கள்
அறிவதில்லை.

என்னதான் செய்வது, எப்படி செய்வது மக்கள் சக்தியை மிஞ்சியது இங்கே எதுவும்
இல்லை.
மக்கள் சாதித்தது தான் சல்லிக்கட்டு போராட்டம், தன்னெழுச்சியான போராட்டங்கள்
தான் அதற்கு முடிவு. அதை மிக சரியாக செய்ய கூடியவர்கள் இன்றைய இளைஞர்கள்.
இவர்களை ஒருங்கிணைப்பது என்பது தான் சிரமாக உள்ளது.

இதை மிக சரியாக செய்துவிட்டால் நாம் இந்த திட்டங்களை எதிர்த்து நிற்க முடியும்.
இல்லையெனில் விளை நிலமெல்லாம் உலர் நிலமாய் மாறிவிடும், சுவாசிக்கும்
காற்றும் விசமாய் மாறிவிடும், குடிக்கும் நீரும் விசமாய் மாறிவிடும்.

தங்களால் முடிந்த எதிர்ப்பை காட்டலாம், எல்லா வழிமுறையிலும், இணையத்தில்

மூழ்கி கிடைக்கும் இளைய தலைமுறை
தங்கள் பயன்படுத்தும் முகநூல் (facebook), கீச்சு (twitter), டிக்டாக் (tiktok), பகிரி (whatsapp) ஷேர் சாட் (share chat), மின்னஞ்சல் (eMail) போன்றவற்றிலும்.

சுய தொழில் செய்வோர் தங்கள் கடை விளம்பர பலகைகளிலும், விளம்பரங்களிலும் , அன்றாட வேலைக்கு செல்வோர் வாய்மொழியாகவும், சட்டத்துறை சார்ந்தவர்கள் பொது நல வழக்குகள் மூலமாகவும்

மனித உரிமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற துறைகளில் உள்ளோர் தங்கள் துறை மூலம் இயன்றதை செய்யலாம்,
மருத்துவ பணியாளர்கள் இதன் மூலம் வரும் உடல் சம்மந்தப்பட்ட பாதிப்புகள் பற்றி தொடர்ந்து எல்லா இடங்களிலும் விளக்கலாம்.

ஊடகங்களில் உள்ள நல்லவர்கள் இந்த பல்வேறு வகையான போராட்டங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரலாம்.
நாம் எந்த நாட்டில் எந்த துறையில் இருந்தாலும் இந்த வாழ்வாதார பிரச்சினையை கையில் எடுக்கலாம். எனக்கென்ன என்று கடந்து சென்றால், இந்த தலைமுறையோடு நாம் நாடு கடத்தப்படுவோம்.

உங்களோடு இந்த வாழ்வியல் சூழல் முடிய வேண்டுமா அல்லது இந்த தலைமுறை தழைக்க வேண்டுமா?

தமிழை அழிக்க துடிப்போர்
தமிழனை அழிக்க துடிப்போர்
மத்தியில் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமா?

சிறைக்கு செல்வோம் என அஞ்சாமல் சிறை சென்றால் தான் சுதந்திர காற்றை சுவாசிக்க முடியும் என்று போராடிய நம் முன்னோர்கள் போல செயல்படுவோம்.

காலனையும் வெல்வோம்
களத்தினில் நின்று

அருள் பாண்டியன். சி
பூவனூர்

# துரோகம்



கற்பகம் (ஆசிரியை)

தந்தை: மகனுக்கு 50 பெண் பார்த்து ஒரு பெண்ணை மணம் முடிப்பார்கள். பெண்களுக்கு முதலில் வரும் மாப்பிள்ளையை வரனை தட்டினால் தட்டிக்கொண்டே போகும் என்று விசாரணை செய்யாமல் பொருத்தம் பார்க்காமல் மணம் முடிப்பது தான் துரோகம்.

மணமகன்: பொதுவாகவே ஒரு ஆண் தன்னுடைய தகுதி என்ன என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். இருந்தும் தகுதிக்கு மீறி பெண்ணை தேர்வு செய்து பெண்களின் வாழ்கையை அழிப்பது தான் துரோகம்.

அண்ணன் தம்பி: தாய் தகப்பன் தான், தன் கூட பிறந்த அக்கா தங்கைக்கு சரியான மணமகனை தேர்ந்தெடுக்கவில்லை. அதை நாம் சரிசெய்ய வேண்டும் என்று முன்வராமல் தன் வாழ்க்கை, தன் குடும்பம் என்று சுயநலத்துடன் இருப்பதும் துரோகம் தான்.

ஆண்கள்: பல ஆண்கள் திருமணமான பெண் என்று தெரிந்தும் அவர்களுக்கு நேரிலோ அலைபேசியிலோ காதல் வலை வீசுவது, நல்லா வாழ்கின்ற குடும்ப பெண்கள் மனதை கெடுத்து வாழ்க்கையை சீரழிப்பதும் துரோகம் தான்.

(குறிப்பு) இத்தனை துரோகங்கள் செய்யும் ஆண்களை மட்டுமே குறிப்பிடுகிறேன். சில நல்லகுணம் படைத்த ஆண்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு என் அன்பான வாழ்த்துகள்.

நட்பு: ஆண் பெண்: யுனிவர்ஸ் உங்களுக்கு இவர் தான் நண்பர் என கூறியது. ஆனால் உங்கள் நண்பருக்கு நீங்கள் தான் நண்பர் என கூறவில்லை. இருந்தும் உங்கள் நட்பை ஏற்றுக்கொண்டு பெருமைகளை வெளிப்படுத்தி உங்களுக்கு மேலும் சில நண்பர்கள், மருத்துவர்கள், உறவினர்கள் என அறிமுகப்படுத்தி உங்கள் ரகசியங்களை உள்ளடக்கி ஆபத்து நேரங்களில் சரியான அறிவுரையும், ஆறுதலையும் கூறி உங்களை பாதுகாத்து கொண்டிருக்கும் உங்கள் நண்பரின் நல்ல செயலை அவதூறாக வெளியிட்டு அவர் கைகாட்டிய நண்பர்களை மருத்துவர், உறவுகள் அனைவரையும் எதிராக திருப்பிவிட்டு யுனிவர்ஸ் காட்டிய அற்புதமான உண்மையுள்ள நட்பை கொச்சைப்படுதியதும் துரோகம் தான். (குறிப்பு) நட்பின் கற்பு ரகசியம் காத்தல்.

குரு ஆசிரியர் ஆசிரியை: தனது ஆசிரியர் தன்னை நல்வழிபடுத்துகிறார் என்று நம்பி தனது மனதில் பட்டதையும் தன் வாழ்வின் வெற்றி, தோல்விகளை மனம்விட்டு

பொறுமையாக எடுத்துக் கொள்ளாமல் பொறாமையாக எடுத்துக்கொண்டு தனது ஒரு மாணவியையே வீழ்த்திய குருக்கள் செய்ததும் துரோகம் தான்.

எனவே அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, அக்கா, தங்கை, கணவன் மனைவி, குழந்தைகள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் ஒருவருக்கு ஒருவர் மனம்விட்டு நம்பிக்கையுடன் கூறும் உண்மையான உணர்வுகளை மற்றவர்களிடம் கூறி அன்பான நம்பிக்கையை உடைத்து துரோகம் என்ற சொல்லுக்கு இடம் கொடுக்காமல் அனைவரும் உண்மையான அன்போடு இருங்கள். உங்களை நம்பியவர்களுக்கு உண்மையாக இருங்கள். நன்றி!

--

## ஆசிரியை கற்பகம்




## ஓவியம்



ரோசி (ஆசிரியை)

# பிடிப்பதில்லை

உன்
மௌனங்களை
எனக்கு பிடிப்பதில்லை...
உதிர்ந்த பூக்களைப் போல,

உன்
கோபங்களை
எனக்கு பிடிப்பதில்லை...
வறண்ட நதிகளைப் போல,

உன்
கண்ணீர்த்துளிகளை
எனக்கு பிடிப்பதில்லை...
பொய்த்த வானத்தை போல,

உன்னை
எனக்கு பிடிப்பதில்லை...
என்னை எனக்கு பிடிக்காததை
போல!

------

# ஆடை

ஒவ்வொரு முறையும்
தனக்கான உடைகளை
வாங்கி வர சொன்னால்
எனக்கான உடைகளை
மட்டும் வாங்கி வரும்
அம்மாவிடம் இருந்ததில்லை
கிழிந்த இரண்டு புடவைகளைத்
தவிர வேறொன்றும்!

-----

# செல்ல பெயர்கள்

செல்லமாய் அப்பா ஒரு பெயர்
வைத்தும்,
அம்மா ஒரு பெயர்
வைத்தும்,
அக்கா ஒரு பெயர்
வைத்தும்
அழைக்கின்ற
போதெல்லாம்
அதிகமாய்
வலிக்கிறது...
சாலையோரங்களில்
முடங்கிக்கிடக்கும்
பெயர் அறியா அனாதைக்
குழந்தைகளின் வேதனைகள்!

மு.முபாரக்
ஜீ.கல்லுப்பட்டி
தேனி மாவட்டம்
8072600090

# பப்பியம்மா சார்




சில நாட்களுக்கு முன்பு கும்பகோணத்திலிருந்து தஞ்சை நோக்கி இருசக்கர வாகனத்தில் பயணிக்கிறேன், இடையில் தொலைபேசி அழைப்பு வர வாகனத்தை நிறுத்தி பேசி விட்டு புறப்பட எத்தனிக்கையில், எதிரே நின்ற bulletல் இருந்த படம் நம் கவனம் ஈர்க்கிறது...

அதை செல்போனில் படம் எடுக்கிறேன் அப்போது பக்கத்தில் உள்ள கடையில் இருந்து வெளி வரும் ஒருவர் நம்மை கவனித்து விட்டு பப்பியம்மா சார் என்கிறார்...

சுவாரசியமாக அவரது முகத்தை நோக்குகிறேன், ஆமாம் சார், அவங்க பேரு பப்பியாம்மா எங்க வீட்டில ஏழு வருஷம் வளர்த்தோம், ஒரு புள்ளை மாதிரி இல்ல புள்ளையாவே வளர்த்தோம்...

என் பேரு சாந்தகுமார் சார் பசுபதிகோவில்ல கயிறு பேக்டரி வச்சுருக்கேன், பப்பியம்மா வந்த பிறகு தான் சார் என் வாழ்க்கையே மாறியது, அதன் பிறகு தான் தொழில் பிக்கப் ஆச்சு, புதுசா மனை வாங்கி வீடு கட்டினேன்...

வீடு கட்டி குடிபோக பத்து நாள் தான் இருக்கும், மாடில தடுப்பு கட்டை கட்டும் வேலை நடந்துட்டு இருந்துச்சு காலையில கொத்தனார் சீக்கிரம் வந்துடுவாரேன்னு, இரவு 11 மணிக்கு ஆரம்பிச்சு காலைல 3 மணி வரைக்கும் செங்கல்கை நான் ஒத்த ஆளா கீழிருந்து மாடிக்கு கொண்டு போனேன்...

கடைசி ரெண்டு வரிசை தான் பாக்கி, அதுவரை என்னை சுத்தி சுத்தி வெளையாண்டு வந்த பப்பியம்மா அந்த கடைசி ரெண்டு அடுக்குகல்லை எடுக்க மட்டும் விடலை குளச்சுகிட்டும் என் கைலியை இழுத்துகிட்டும் இருந்துச்சு, சத்தம் போட்டு பார்த்தேன் அது விடலை, அப்புறம் சரி காலையில் எடுத்து அடுக்கிடுவோம்னு அங்கேயே வரண்டாவுல படுத்துட்டேன்...

காலையில நல்லா தூங்கிட்டு இருக்கும் போது ஒரே சத்தம், பதறி எழுந்து பார்த்தால் அந்த மிச்ச செங்கல் அருகே அவ்வளவு பெரிய நல்ல பாம்பு, சித்தாளுங்க எல்லாம் சேர்ந்து அடிச்சு போட்டு இருக்காங்க...

நான் இன்னைக்கு உயிரோடு உங்க முன்னாடி நின்னு பேசிகிட்டு இருக்கேன்னா அதுக்கு காரணம் பப்பியம்மா தான் சார்...

(தொண்டை அடைக்குது நமக்கு)

ஏங்க படத்துல பொட்டு வச்சுருக்கிங்க? எப்படி செத்துச்சு...

பக்கத்துவீட்டுக்காரன் வெஷம் வச்சுட்டான் சார், அந்தாளு வீட்டு கோழிய ஏதோ ஒரு நாய் பிடிச்சுருக்கு அதுக்காக அந்த ஆளு கருவாட்டில் விஷம் தடவி தெருவில் போட்டுருக்காரு, அதை பப்பியம்மாவும் தின்னுடுச்சு...

ரொம்ப பெரிய பிரச்சனை ஆச்சு சார்... அய்யம்பேட்டை போலீஸ்ல புகார் கொடுத்தேன் போலீஸார் எல்லாம் வந்து விசாரிச்சுட்டு போனாங்க, அப்புறம் அந்த ஆள் ஊர் பஞ்சாயத்துல வருத்தம் தெரிவித்தார் அவன் வீட்டு குழந்தைகளும் என்கிட்ட வந்து கண்ணீர்மல்க ஆறுதல் சொன்னாங்க, அப்புறம் கேச வாபஸ் வாங்கிட்டேன்...

நம்ம வீட்ல ஒரு மனுசாள் செத்தா என்னென்ன சடங்கு செய்வோம்மோ அதெல்லாம் செஞ்சு ஊர்வலமா எடுத்துட்டு போயி என் பேக்டரி தோட்டத்துல அடக்கம் பண்ணி சமாதி கட்டி டெய்லி வெளக்கேத்துறேன் சார்...

சாகறதுக்கு ஒரு வாரம் முன்னாடி தான் அஞ்சு குட்டி போட்டுருந்துச்சு, நான் 2 மாசம் தொழில பார்க்காமா விட்டுலயே இருந்து நேர நேரத்துக்கு புட்டி பால் கொடுத்து அஞ்சு உசுரையும் காப்பாத்துனேன் சார், அப்புறம் தான் எனக்கு உசுரே வந்துச்சு...

என் ரெண்டு பொண்ணு கல்யானத்துக்கும் சம்மந்தி வீட்ல தகவல் சொல்லிட்டு நினைவில் பப்பியம்மா பசுபதிகோவில் என்று பத்திரிக்கையில் போட்டேன் சார்...

எனக்கு ஆகஸ்டு 9 ஆம் தேதி பொறந்த நாளு பப்பியம்மா இறந்தது ஆகஸ்டு 8 ஆம் தேதி, அன்னியோட விட்டேன் சார் வாழ்க்கையில பொறந்த நாள் கொண்டாடுறத...

இன்னும் இம்மண்ணில் சில மனிதர்கள் வாழ்கிறார்கள் என்ற உன்மையை நான் உணர்ந்த நொடி அது...

நெடுஞ்சாலை இரைச்சலிலும் எங்கள் இருவருக்கும் மட்டும் வாய்த்த பேரமைதியை தொந்தரவு செய்ய மனமின்றி அவரிடம் மென்மையாய் கை குலுக்கி விட்டு துக்க வீட்டிலிருந்து வெளியேறும் மனநிலையில் அங்கிருந்து நகர்கிறேன் நான்

என்னையே பார்த்தபடி ஏதோ சிந்தனையில் அங்கேயே நிற்கிறார் அவர்..



**- மலர்மன்னன்**
வடுவூர்

# ம(ரும)கள்

பாசமாய் வளர்த்த பெண்ணை
வழியனுப்ப
வாசல் எல்லாம் கண்ணீர்

அங்கே மாமன் வீட்டில்
அவளை வரவேற்க
வழியெல்லாம் பன்னீர்.

இங்கு எல்லாம் முடிந்ததே என்ற
ஏக்கத்தில் அவள் போனாள்

அங்கே இவளுக்கு மட்டும் அல்ல
ஒரு குடும்பத்திற்கே ஆரம்ப
கருப்பொருளாய் இவள்

தலையணை இல்லாமல்
தாய்மடி உறங்கியவள்

அங்கே தலையணை
நனைத்தாள் கண்ணீரால்..

ஆனால் தலைவன்
தன் மடி தாங்கி கண்ணீர் தடுத்தான்

இவளுக்கு பிடிக்கும் என்று
ஒதுக்கி வைப்பார்கள் தாய் வீட்டில்..

இவளுக்கு பிடிக்கும் என்பதற்காகவே
அவர்களும் பழகிக்கொள்வார்கள்
மாமியார் வீட்டில்

இன்னும் தாய் வீட்டு பாசம்
குறையவே இல்லை என்று
உணர்வாள்.

அதே கணம் தாரத்தின் பாசம்
அளவில்லாமல்
கூடிக் கொண்டே இருப்பதையும்
அறிவாள்

மகளாக வளர்க்கப்படும் ஒவ்வொரு
பெண்ணும்
அங்கே மருமகளாய் சென்று
ஒரு குடும்பத்தையே வளர்க்கிறாள்!
வளம் பெற செய்கிறாள்!

தாரம் தாயானாள் அவள் மருமகள்
அல்ல
என்றுமே மகள் தான்!....

- பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.

# சொட்டுமருந்தும், தடுப்பூசியும்
## மறைக்கப்பட்ட அதிர்ச்சி உண்மைகள் !!!!

நம் வீட்டில் ஒரு குழந்தை பிறந்துவிட்டால் போதும், ஒரு பெரிய அட்டவணை வைத்துக் கொண்டு அதற்கு இதற்கென்று ஆயிரத்தெட்டு தடுப்பூசிகள் போடுகிறோம், போதாத குறைக்கு இடையிடையே சொட்டு மருந்துகள் வேறு கொடுக்கிறோம். இதெல்லாம் ஏன் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் என்றாவது சிந்தித்ததுண்டா ?

எல்லாம் குழந்தைகளின் நல்லதுக்கு தானே அவர்களை உயிர்கொல்லி நோயிலிருந்து பாதுகாக்க தான் என்று நாம் நினைத்தால் நம்மை விட ஏமாளிகள் வேறு யாரும் இருக்க முடியாது.

உலகத்தில் உள்ள உயிர்கொல்லி நோய்கள் அனைத்திற்கும் சேர்த்து நம் குழந்தைக்கு தடுப்பூசி போட்டாச்சு, ஆனாலும் மாதம் மாதம் மருத்துவமனைகளுக்கு ஜுரம், வைரஸ் ஜுரம், வாந்தி,பேதி, மலேரியா என்று பிள்ளைகளை கூட்டிக் கொண்டு நடையா நடக்கிறீர்களே, உயிர்கொல்லி நோயை எதிர்க்கும் அளவிற்கு தயார்படுத்தபட்ட உங்கள் குழந்தையின் உடம்பினால் ஜுஜுபி ஜுரத்தை கட்டுப்படுத்த முடியவில்லையே ஏன் ? என்று என்றாவது யோசித்ததுண்டா ...?

அது வேற ஒண்ணுமில்ல சொல்ல சொல்ல கேட்காம ஐஸ் வாட்டர் குடிச்சான்,பச்ச தண்ணிகுடிச்சா என்று உங்கள் பிள்ளைகளை தான் குறை கூறுவீர்கள். ஆனால் உண்மை என்னவோ அதுவல்ல ..

நீங்கள் உங்கள் பிள்ளைகளின் உடல் நலத்திற்கு நல்லது என்று கூறி எதனை தடுப்பூசியாகவோ, சொட்டு மருந்தாகவோ போட்டீர்களோ, அதன் பக்கவிளைவுகள் இவை என்றால் உங்களால் நம்பவே முடியாது. ஆனால் அதைவிட அதிர்ச்சியூட்டும் விஷயம் என்ன தெரியுமா ?

நீங்கள் எந்த நோய் வர கூடாது என்று நினைத்துக் கொண்டு தடுப்பூசி போடுகிறீர்களோ அந்த தடுப்பூசியில் இருப்பது அதே நோய் கிருமி தான்... நோயிற்கான மருந்து அல்ல.... மண்டை குழம்புகிறதா..? தொடர்ந்து படியுங்கள் நீண்ட பதிவு இது மிக முக்கிய செய்திகளை உள்ளடக்கியது.

போலியோ சொட்டு மருந்து :
போலியோ சொட்டு மருந்தால் தான் போலியோ உள்பட பல நோய்கள் ஏற்படுகின்றன என்றால் நம்ப முடிகிறதா? இந்த உண்மையை சொல்பவர் யாரோ, எவரோ அல்ல. போலியோ சொட்டு மருந்தை கண்டுபிடித்தவரே தான். ''1961ம் ஆண்டுக்குப் பின்,

அமெரிக்காவில் ஏற்பட்ட அனைத்து போலியோவுக்கும் காரணம் போலியோ சொட்டு மருந்து தான் !'' என்று அமெரிக்க செனட் கமிட்டியில் ஒப்புக் கொண்டிருக்கிறார் ஜோனல் சால்க். இவர்தான் போலியோ சொட்டு மருந்தை கண்டுபிடித்தவர். ''போலியோவிலிருந்து பாதுகாத்துக் கொள்ள கொடுக்கப்பட்ட தீவிர தடுப்பு மருந்து முயற்சிக்குப் பின்னரும், இம்மருந்தால் பெருமளவு பலன் ஏதும் ஏற்படவில்லை என்பது அரசு ஆவணங்களை உற்று நோக்கும்போது தெரிகிறது...'' இப்படி சொன்னவரும் போலியோ தடுப்பு மருந்தை உருவாக்கியவர்தான்.

அம்மை நோய்க்கான மருந்தை 1796-ல் எட்வர்ட் ஜென்னர் கண்டுபிடித்தார். தன்னுடைய மகனுக்கு முதன்முதலில் இந்த மருந்தை கொடுத்து தன் கண்டுபிடிப்பை நிரூபித்தார். அனைத்து மருத்துவர்களாலும் இந்த மருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பு அந்த வேதனையான சம்பவம் நிகழ்ந்தது. ஆமாம், சிலவருடங்களில் அம்மை தடுப்பு மருந்து முதன்முதலில் யாருக்கு போடப்பட்டதோ, அந்த ஜென்னருடைய மகனும், இன்னொருவரும் மருந்தின் வீரியத்தால் மரணமடைந்தனர். இதனால் எட்வர்ட் ஜென்னர் தன்னுடைய 2வது மகனுக்கு அம்மைத் தடுப்பூசியை போடவில்லை. ஆனால், அதற்குள் உலகம் முழுவதும் அம்மைத் தடுப்பூசி புழக்கத்துக்கு வந்துவிட்டது...

மேலே சொன்ன சம்பவங்கள் முதலாளித்துவத்தின் கோர பசிக்கு மனிதர்கள் தடுப்பூசிகள் என்ற பெயரில் இரையாகும் கொடூரத்தின் சில மாதிரிகள்தான். இப்படி உலகையே குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளையே சுடுகாடாக மாற்றும் போக்கு முதலாளித்துவ சமூகம் எப்போது பிறந்ததோ அப்போது முதலே நடைமுறைக்கு வந்துவிட்டது. முதலாளித்துவத்தின் அடுத்தகட்டமான ஏகாதிபத்தியத்தில் இந்தப் போக்கு உச்சநிலையை எட்டியிருக்கிறது.

தடுப்பூசிகளின் விபரீதம் குறித்து பார்ப்போம்.

அம்மை தடுப்பு மருந்துக்கு Vaccination என்று பெயர் சூட்டினார் ஜென்னர். பசுவைக் குறிக்கும் லத்தீன் சொல்லான Vacceinus-லிருந்து உருவான சொல் இது. இந்த மருந்து எப்படி தயாரிக்கப்படுகிறது என்பதை நாம் தெரிந்துக் கொள்ள வேண்டும். மனிதர்களுக்கு ஏற்படும் அம்மைக் கொப்புளங்களிலிருந்து வரும் சீலை எடுத்து பாதுகாத்து, பசுக்களுக்கு செயற்கையான காயங்களை ஏற்படுத்தி அந்த புண்களுக்குள் செலுத்துவார்கள். இதனால் இப்புண்கள் வழியே அதிகமான சீழ் வெளியேறத் தொடங்கும். இந்த சீலை எடுத்து அதோடு சில இருப்பு ரசாயனங்களைக் கலந்து அம்மை தடுப்பு மருந்தை தயாரிக்கிறார்கள்.

போலியோ சொட்டு மருந்து தயாரிப்பும் கிட்டத்தட்ட இது மாதிரிதான். போலியோவை ஏற்படுத்துவதாக நம்பப்படும் கிருமிகளை குரங்குகளின் சிறுநீரகத்தில் ஊசி வழியே செலுத்துகிறார்கள். சிறுநீரக சூழலிலேயே இந்தக் கிருமிகள் வளர்த்தெடுக்கப்பட்டு

பின்னர் போலியோ சொட்டு மருந்தாக தயாரிக்கப்படுகிறது.

இப்படி மருந்து தயாரிக்கப் பயன்படும் குரங்குகள், உரிய சோதனைக்கு பிறகுதான் தேர்வு செய்யப்படுகின்றன. என்றாலும், பரிசோதனைகளின் மூலமே வரப்போகிற அல்லது வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நோய்கள் அனைத்தையும் கண்டுபிடித்துவிட முடியாது. இப்படி 1950-களில் பரிசோதிக்கப்பட்ட குரங்குகளில் சிமியன் வைரஸ் 40 (SV40) என்ற கிருமி பாதித்திருந்த விஷயம், மருந்துகள் தயாரிக்கப்பட்ட பிறகுதான் தெரிய வந்தது.

இதனால்தான் 'இந்தியாவில் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதைத் தடை செய்யவேண்டும்' என்று தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் டாக்டர் சத்யமாலா வழக்கு தொடர்ந்தார். ஆனால், அந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது..! அதேபோல், 2006-ல் மட்டும் போலியோ சொட்டு மருந்து கொடுத்து இந்தியாவில் 1600 பேருக்கு போலியோ பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும், 27,000 பேர் பாதிக்கப்பட சாத்தியம் இருப்பதாகவும் ஜூலை 11, 2008ம் ஆண்டு தேதியிட்ட 'தி இந்து' நாளிதழில் கட்டுரை எழுதினார் இந்திய மருத்துவக் கழகத்தின் தடுப்பு மருந்துப் பிரிவின் தலைவரான டாக்டர் ஜேக்கப் புலியேல் (Politics of Polio, July 11/2008).

இந்தக் கட்டுரையின் விவரத்தையும் உண்மையையும் ஆளும் வர்க்கங்கள் கண்டுகொள்ளவேயில்லை... 1853ம் ஆண்டு இங்கிலாந்தில் அம்மை தடுப்பு ஊசியை குத்தும் சட்டம் கட்டாயமாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து உலகின் பல பகுதிகளுக்கும் தடுப்பு மருந்துகள் பரவின. கட்டாய சட்டங்களும் அமலுக்கு வந்தன. ஆனால், அம்மை நோய்த் தாக்கத்தில் இம்மருந்துகள் எந்தவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. பதிலாக பல புதிய எதிர் விளைவுகளே ஏற்பட்டன. இதனால் 1889ம் ஆண்டு இங்கிலாந்தில் ராயல் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. 7 ஆண்டுகள் விசாரணைக்கு பிறகு இக்கமிஷன் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து இங்கிலாந்தில் கட்டாய தடுப்பூசி சட்டம் நீக்கப்பட்டது.

1870 - 71 களில் அம்மை நோய் ஜெர்மனியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சுமார் 10 லட்சம் பேருக்கு அம்மை நோய் தோன்றியது. இவர்களில் ஒரு லட்சத்து இருபதாயிரம் பேர் மரணமடைந்தனர். இறந்தவர்களில் நூற்றுக்கு 96 பேர் அம்மை நோய் தடுப்பூசியை குத்திக் கொண்டவர்கள். அதுமட்டுமல்ல, அம்மைத் தடுப்பூசி குத்திக் கொண்ட சிறுமிகள், வளர்ந்து தாயானதும் அவர்களுக்கு தாய்ப்பால் சுரக்கவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. இந்த உண்மை வெளிப்பட்டதும் 1880ம் ஆண்டு உலக தடுப்பூசி எதிர்ப்புச் சங்கம் (International Anti & Vaccination League) உருவாக்கப்பட்டது. அந்த ஆண்டின் இறுதியில் பாரீசில் நடைபெற்ற முதல் மாநாட்டில் பல நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். தடுப்பூசிகளை எதிர்க்கும், முறைப்படுத்தக் கோரும் 10 தீர்மானங்கள் அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. ஆனால்... அது நடைமுறைக்கு வர பன்னாட்டு நிறுவனங்கள்

அனுமதிக்கவில்லை...

இந்த புள்ளிவிபரத்தை பாருங்கள். 1980களில் அமெரிக்காவில் குழந்தைகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை 10. அதுவே 2008ல் 36 ஆக உயர்ந்தது. அத்துடன் 1983ல் மூளை வளர்ச்சி குறைவுள்ள அமெரிக்க குழந்தைகள் பத்தாயிரத்தில் ஒருவர்தான். ஆனால், 2008ல் அமெரிக்க குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவு விகிதம் நூற்றைம்பதில் ஒருவராக மாறியிருந்தது. அதாவது 3000 மடங்கு அதிகரித்திருந்தது. இதற்கு காரணம் தடுப்பூசிகள்தான்.

மூன்றாம் உலக நாடுகள் அமெரிக்கா செல்லும் பாதையைத்தான் பின்பற்றுகின்றன என்பதால் ஆசிய, ஆப்ரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள புதிய புதிய நோய் பாதிப்புக்குகளுக்கு காரணம் தடுப்பூசிகள் தான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

மஞ்சள் காமாலைக்காக விளம்பரப்படுத்தப்பட்ட தடுப்பூசியின் கதையைக் கேட்டால் வயிறு எரியும். ஹெர்படைட்டிஸ் ஏ, ஹெர்படைட்டிஸ் பி என மஞ்சள் காமாலையில் இருவகை உண்டு. இதில் ஹெர்படைட்டிஸ் பி ஆட்கொல்லி நோய். ஆனால், தொற்று நோயல்ல. அதேபோல் பரவலாக வரக் கூடியதும் அல்ல. அபூர்வமாகவே மனிதர்களை தாக்கும் இந்த ஹெர்படைட்டிஸ் பி-க்கான தடுப்பூசி வீரியமிக்கது. இதை ஹெர்படைட்டிஸ் ஏ தாக்கியவர்களுக்கு போட கூடாது. உண்மை இப்படியிருக்க, 1990-களில் பூதாகரமாக மஞ்சள் காமாலைத் தடுப்பூசி குறித்து (ஹெர்படைட்டிஸ் ஏ) பிரசாரம் செய்யப்பட்டது.

இது ஏதோ ஆட்கொல்லி நோய் போலவும், அந்நோய் வந்தவர்கள் எளிதில் மரணமடைவார்கள் என்பது போலவும் விளம்பரம் செய்யப்பட்டது. இந்த ஏகாதிபத்திய வெறிக்கு இந்தியா போன்ற தெற்காசிய நாடுகளும் பலியாகின. மஞ்சள் காமாலைக்கு மருந்துகள் எதுவும் இல்லாமல் உணவுமுறையை ஒழுங்குபடுத்துவதன் மூலமே குணமாக்கலாம் என்ற பழம்பெரும் உண்மை மறைக்கப்பட்டது.

இதன்விளைவாக 1990களில் அமெரிக்காவில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் மஞ்சள் காமாலை தடுப்பூசி கட்டாயம் போட வேண்டும் என்ற சட்டம் நடைமுறைக்கு வந்தது. ஆனால், 1997-ல் நடத்தப்பட்ட அமெரிக்க அரசின் ஆய்வில் மஞ்சள் காமாலை தடுப்பூசியும், அம்மைத் தடுப்பூசி போன்றே 13 விதமான புதிய நோய்களை ஏற்படுத்தும் உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. வலிப்பு, ஜன்னி, கண்பார்வை பாதிப்பு, மூளைக் காய்ச்சல் போன்றவை இதில் அடங்கும். உடனே அமெரிக்க அரசு கட்டாய தடுப்பூசி சட்டத்தை அவசரமாக நீக்கியது. இதனால் ஏராளமான தடுப்பூசி மருந்துகளை உற்பத்தி செய்து வைத்திருந்த அமெரிக்க மருந்துக் கம்பெனிகள் அதிர்ந்தன.

இந்த மருந்தை என்ன செய்வது?
அவர்களின் துயர் தீர்க்க முன்வந்தார் பில்கேட்ஸ்....
தனது தொண்டு நிறுவனத்தின் மூலம் ஆந்திர மாநிலத்தில் 4.5 லட்சம் குழந்தைகளுக்கு மஞ்சள் காமாலை தடுப்பூசிகளை இலவசமாக போட்டார். இந்த தடுப்பூசி அமெரிக்க நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்டு, அமெரிக்க அரசால் 1997ல் தடைசெய்யப்பட்டவை...!!!!

தடுப்பூசிகளை ஆதரிப்பவர்கள் என்ன சொல்கிறார்கள்? 'முன்பெல்லாம் கொள்ளை நோய்கள் மக்களை கூட்டம் கூட்டமாக தாக்கியதே... தடுப்பூசிகள் வந்ததற்கு பின்னால்தானே கொள்ளை நோய்கள் கட்டுக்குள் வந்தன?' நம் மனதில் இப்படித்தான் பதிய வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மை இதுமட்டுமே அல்ல. பல தீவிரமான கொள்ளை நோய்களை தடுப்பூசிகள் தடுத்து நிறுத்தியதை காட்டிலும் தடுப்பூசி என்னும் பெயரில் பன்னாட்டு நிறுவனங்கள் நடத்தும் வணிகமும், இதனையடுத்து தோன்றியுள்ள புதுப்புது நோய்களும் மிக அதிகம். 2009ம் ஆண்டு சீனாவிலிருந்து உலகம் முழுக்க சார்ஸ் (பறவைக்காய்ச்சல்) பரவுவதாக பிரச்சாரம் செய்தார்கள். இந்த சளிக்காய்ச்சலை கட்டுப்படுத்தவோ, பரவாமல் தடுக்கவோ எந்த மருந்தும் கண்டுபிடிப்பதற்கு முன்பே அக்காய்ச்சல் படிப்படியாக குறைந்தது. இதேநிலைதான் இந்தியாவில் ஏற்பட்ட சிக்குன்குனியா காய்ச்சலுக்கும் ஏற்பட்டது.
பன்றிக்காய்ச்சலையே எடுத்துக் கொள்வோம். ஏதோ கொள்ளை நோய் போல உலகம் முழுவதும் பேசப்பட்ட இந்நோய்க்கான தடுப்பு மருந்து தாமிஃப்ளூ விற்பனைக்கு வரும் முன்பே இந்நோய் குறைந்துவிட்டது. எந்தவொரு நோயானாலும் மக்களின் உடல் நிலை மற்றும் சுற்றுப்புற சமூக காரணிகளை வைத்து தானாகவே ஏற்படும். குறிப்பிட்ட இடைவெளியில் தானாகவே மறையும்.

இந்த அறிவியல் உண்மை மறைக்கப்பட்டு, ஆனால், இதன் சாராம்சத்தை - அதாவது தானாகவே மறையும் தன்மை - மட்டும் எடுத்துக் கொண்டு ஆளும் வர்க்கங்களும், பன்னாட்டு நிறுவனங்களும் ஏதோ தங்களால்தான் - தாங்கள் அறிமுகப்படுத்திய தடுப்பூசியில் தான் - நோய்களை கட்டுப்படுத்த முயன்றது போல் பிரசாரம் செய்கின்றன. சில பழைய பக்கங்களை பார்ப்போம்.

1950-களில் போலியோ நோயின் தாக்கம் உலகெங்கும் 40 மில்லியனாக இருந்தது. அப்போது போலியோவிற்கான எந்த தடுப்பு மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. 1952-ல் 19 மில்லியனாகவும், 1954-ல் 8 மில்லியனாகவும் தன்னால் இது குறைந்த பிறகு 1956-ல் போலியோ தடுப்பு மருந்து கண்டறியப்பட்டது. இப்போது என்ன சொல்கிறார்கள்? இந்த தடுப்பு மருந்தால்தான் போலியோ கட்டுக்குள் இருப்பதாக... தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படாத டைபாய்டு காய்ச்சல் 1910-ல் 500 மில்லியனுக்கு மேல் உலகெங்கும் பாதிப்பு ஏற்படுத்தியது. தடுப்பூசி பயன்படுத்தாத நிலையில் 1920-ல் அதுவே 200 மில்லியனாகவும், 1930-ல் 100 மில்லியனாகவும் குறைந்துவிட்டது.

இப்படி இயற்கையாக குறைந்த பல நோய்களைத் தங்கள் வரைபடத்தில் ஏற்றி வருமானமாக மாற்றும் தந்திரத்தைத்தான் தடுப்பூசி தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் செய்கின்றன. இப்போது தடுப்பூசி மருந்துகள் குறித்த ஆராய்ச்சியாளர்கள், மருத்துவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதற்கு பதிலாக - இந்த மருந்துகளை தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் என்ன சொல்கின்றன என்று பார்ப்போம்.

அதாவது ’புகைப்பிடிப்பது உடல் நலத்துக்கு கேடு...’ என்று அச்சிடுகிறார்கள் இல்லையா?

அதேபோல் தடுப்பூசி மருந்துடனும் சில எச்சரிக்கைகளை பன்னாட்டு நிறுவனங்கள் அச்சிடுகின்றன. அவை என்ன தெரியுமா?

1. அதிகப்படியான காய்ச்சல் (105 டிகிரி அல்லது அதற்கு மேல்)

2. மந்தமாக இருத்தல்; நீடித்த அசதி

3. மூளை வளர்ச்சி குறைபாடு; மூளை பாதிப்பு

4. எப்போதாவது வலிப்பு; மயக்கம்

5. கண் நரம்புக் கோளாறுகள்; நரம்பு தொடர்பான நிரந்தரக் கோளாறுகள் ... ஆகியவை தடுப்பூசிகள் போட்டுக் கொண்டால் ஏற்படலாம் என எச்சரிப்பது அந்த தடுப்பூசி தயாரித்த நிறுவனங்கள்தான்.

ஆனால், எந்த மருத்துவரும் இதைக் குறித்து நோயாளிகளிடம் சொல்வதில்லை...? அதுமட்டுமல்ல, உச்சபட்ச விளைவாக SIDS (Sudden Infant Death Syndrom) ஏற்படுத்துவதாக தடுப்பூசியை தயாரிக்கும் நிறுவனங்கள் சொல்கின்றன.

இதன் அர்த்தம் என்ன தெரியுமா? குழந்தை திடீரென இறந்து போகும். ஆனால், இந்த உண்மையை - அதாவது தடுப்பூசியை தயாரித்த நிறுவனம் சொல்லும் எச்சரிக்கையை - எந்த மருத்துவரும் நோயாளிகளிடம் சொல்வதில்லை. பதிலாக சிரஞ்சியில் ஏற்பட்ட மருந்தையே கண்ணுக்கு காட்டுகிறார்கள்....



இந்த நிலை இனிமேலும் தொடர நீங்கள் அனுமதிக்க போகிறீர்களா..?

- அருண்குமார்
நெடுவை

# மாமழை வணங்குவோம்...

கொட்டும் அருவி, நெஞ்சம் குளிரும்!
நடனமாடும் நதி, ஆனந்தம் தரும்!
மழை பொழிந்ததால்..
உழவருக்கு உவகை..?
கார்கூந்தல் மேகம்...
காவிய கவிதை தரும்...!?
மழை கொட்டியதால்
பூமி குளிர்ந்தது...!?
கூடவே எங்கள் மனமும்...?!

எங்களுக்கு –
பணம் வேண்டாம்...!
பகட்டு வேண்டாம்..!
பார் ஆளவும் வேண்டாம்...!

மழையே நீ மட்டும் ....?
மரிக்காமல் வந்துவிடு..!

ஆமாம்.!?
நீ மட்டும்தான் மனித இனம்..
வாழ வைப்பாய்....!?

அதனால்...!
மாமழையை வணங்குவோம்..!
என்றும் பொய்த்து போகாதிருக்க...!?



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி






கோலம்:
S. மலர்கொடி

# ஒளிரும் ஆசிரியர் - 5

## அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியை அன்பரசி!

மகிழ்வித்து மகிழ் என்பதுதான் ஆசிரியர்களின் அறம் ஆகும். அந்த வகையில் திறவுகோல் மின்னிதழில் கடந்த நான்கு மாதங்களாகப் பல்வேறு இருபால் ஆசிரியர்களை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் இத்தொடர் அவர்களது ஆசிரியப் பயணத்தில் புதியதொரு அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. பலதரப்பட்ட இணைய மற்றும் முகநூல் பக்கங்களில் இத்தொடரின் மூலமாக இடம்பெறும் ஆசிரியப் பெருமக்களின் கல்விச் சேவைகளைப் பாராட்டி ஊக்குவிக்கும் விதமாக, அரசு சாரா பல்வேறு அமைப்புகள் விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருவது பெருமிதமாக உள்ளது. மன்னையின் மைந்தர்களின் திறவுகோல் மின்னிதழ் நிர்வாகத்திற்கு ஆசிரியர்களின் சார்பில் நான் என்றும் நன்றிக்கடன் பட்டவன்.

அதுபோல் ஒவ்வொரு மாதமும் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள பத்து ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்களிலிருந்து குறிப்பிட்ட ஒன்றியத்தில் ஒரு சிறந்த நபரைத் தேர்வு செய்து, அவரைப் பற்றிய தகவல்கள் அனைத்தையும் சேகரித்து வெளிப்படுத்துதல் என்பது கடின முயற்சியாகவே தொடர்கிறது... முத்துக்குளித்தலுக்கு ஒப்பானது இப்பணி. இந்த எனது செம்மைப் பணி சிறக்க ஒன்றியம்தோறும் காணப்படும் நண்பர்களின் ஒத்துழைப்பு நினைந்து போற்றத்தக்கது.

அந்த வகையில் இந்த முறை நாம் அறிந்து கொள்ள இருக்கும் நபர் நன்னிலம் ஒன்றியம் செம்பியநல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியை திருமதி கா.அன்பரசி ஆவார். பெயருக்கு ஏற்ப மாணவர்களின் அன்பாசிரியர் இவர். இரண்டு ஆசிரியர்கள் பணிபுரியும் பள்ளி என்றாலும் இவரது பெருமுயற்சி காரணமாகப் பள்ளிக்குத் தேவையான கட்டிடம், குடிநீர் , கழிப்பிடம் மற்றும் தளவாட வசதிகள் அனைத்தும் ஒருங்கே பெற்று திகழ்வது சிறப்பாகும். சுற்றுச்சுவர் வசதியினை வேண்டிப் பெற்ற போதும் அதற்குரிய பெரிய, அகலமான இரும்பு வாயிற்கதவு அமைப்பதற்கு தம் சொந்த பணத்தைச் செலவழித்தது ஊர் மக்களிடையே நற்பெயர் பெற்றுத் தந்தது.

ஒரு பள்ளியை செவ்வனே நிர்வகிக்க அரசு ஆண்டுதோறும் வழங்கும் பள்ளி மானியம் மற்றும் பராமரிப்பு மானிய நிதி மட்டும் போதுமானதல்ல. ஏழை, எளிய, அடித்தட்டுக்



குழந்தைகளின் ஒப்பற்ற புகலிடமாக விளங்கி வரும் அரசுப்பள்ளிகளில் குழந்தைகள் சார்ந்த பல்வேறு செலவினங்களை ஈடுகட்டும் பொருட்டு பள்ளியின் பெயரில் வைப்பு நிதி இருப்பது அவசியமாகும். இதன்பொருட்டு பள்ளிகளில் பள்ளிப் புரவலர் திட்டம் குறைந்த பட்சம் தொகையான ரூ.1000 மற்றும் அதன் மடங்குகளில் பள்ளி நிரந்தர வைப்பு நிதியாக அருகிலுள்ள அஞ்சலகம் அல்லது வங்கியில் முதலீடு செய்யப்பட்டு, அவற்றிலிருந்து பெறப்படும் ஆண்டு வட்டியினைக் கொண்டு மாணவர் நலன் சார்ந்த செலவினங்கள் மேற்கொண்டு வருவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். வயிற்றுக்கும் வாய்க்கும் அன்றாடம் போராடிக் கொண்டிருக்கும் படிக்காத, பாமர பெற்றோர்களிடம் புரவலர் நிதி கோருவதும் பெறுவதும் எளிதில் இயலாத ஒன்று. இவர் ஒரு முன்மாதிரியாக இத்திட்டத்தில் தாம் இணைந்தது மட்டுமல்லாமல் தம் குடும்பத்தினர் எழுவரையும் உறுப்பினர்களாக்கியதன் விளைவாக, இன்று இப்பள்ளியின் புரவலர்களாக மொத்தம் 13 பேர் உள்ளனர்.



ஒரு நல்ல தலைமையாசிரியர் என்பவர் பதிவேடுகளுடன் மட்டுமே போராடுபவர் அல்லர். பன்முகத்தன்மைக் கொண்டவராகவும் தரமான கற்பித்தலை மாணவரிடையே நிகழ்த்தும் ஆசிரியராகவும் திகழ்தல் இன்றியமையாதது. இவரது பள்ளி நிர்வாகம் மற்றும் கற்பித்தல் பணியினை உற்றுநோக்கி வரும் ஊர்மக்கள் ஆங்கில வழிக்கல்வியில் மோகம் கொண்டு தம் குழந்தைகளை அருகிலுள்ள தனியார் ஆங்கிலப் பள்ளிகளில் பணம்கட்டிப் படிக்க வைத்து அல்லல்பட்டுக் கொண்டிருந்த நிலையிலிருந்து விடுபட்டு இலவச கட்டாயத் தரம் மிக்க கல்வி வழங்கும் தம் ஊர் ஊராட்சிப் பள்ளியில் மனமுவந்து சேர்க்க முன்வந்தது நல்ல முன்மாதிரி செயலாகும். நடப்பு ஆண்டு வரை அவ்வாறு சொந்த மற்றும் வேறு குக்கிராமங்களில் இருந்து இங்கு வந்து படிக்கும் குழந்தைகள் எண்ணிக்கை 14 ஆகும்.

அதுபோல், பள்ளி வளாகத் தூய்மையைத் தொடர்ந்து பேணிக் காப்பதும் மரக்கன்றுகளை நட்டு பராமரித்து வருவதும் இவரது சுற்றுச்சூழல் சார்ந்த எண்ணத்தை

வெளிக்காட்டும். மேலும், தம் பள்ளிக் குழந்தைகளுக்குத் தேவையான கற்றல் சார்ந்த பொருள்களைப் பல்வேறு சமுதாய சேவை அமைப்புகள் வாயிலாகப் பெற்றுத்தந்து குழந்தைகளின் கற்றலுக்கு உரமூட்டும் நற்பண்பு அனைவரும் பின்பற்றத்தக்கது என்பது மிகையாகாது. ஆண்டுதோறும் சமத்துவப் பொங்கலிட்டும் விழாக்கள் நடத்தியும் மாணவரிடையே சகோதரத்துவம் வளரப் பாடுபவராக இவர் காணப்படுகிறார்.

குழந்தைகளின் எதிர்காலம் தொடக்கப்பள்ளி வகுப்பறைகளில் நிர்ணயிக்கப்படுவதாகக் கூறுவர். நல்ல அறிவியல் சிந்தனையும் மனப்பான்மையும் உருவாகும் இடம் வகுப்பறைகளே ஆகும். மேனாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம், முதலாம் சந்திராயன் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை, இஸ்ரோ தலைவர் சிவன் உள்ளிட்ட அறிவியல் அறிஞர்களைத் தோற்றுவித்ததில் அக்கால அரசுப்பள்ளிகளில் பணியாற்றிய அறிவியல் பாட ஆசிரியர்களையே சாரும். பொதுவாக பள்ளிகளில் வகுப்பறைகளை உயிரோட்டமிக்கதாக உருவாக்கிக் காட்டுவதில் ஏனைய பாடங்களைவிட அறிவியல் பாடம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. அதனாலேயே, அறிவியல் போதிக்கும் ஆசிரியர்களையே மாணவர்கள் அதிகம் நேசிப்பர். அறிவியல் சார்ந்த எந்தவொரு கடின கருத்தையும் எளிய செயல்விளக்கம் காட்டி எளிமையாகப் புரிந்து கொள்ள செய்வதை எப்போதும் அறிவியல் ஆசிரியர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.



அத்தகைய கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவரான இவர், இடைநிலை ஆசிரியர் பதவியின் பணிமூப்பு அடிப்படையில் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றி வந்தாலும் சூழ்நிலையியல் அறிவியல் பாடத்தைத் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது, செய்து காட்டல் மற்றும் செய்து கற்றலை மாணவர்களிடம் ஊக்குவித்து வீடுகள் தோறும் இளம் அறிவியல் விஞ்ஞானிகளாக மாணவர்களை உருவாக்கி வருவது போற்றத்தக்கது. எளிய அறிவியல் சோதனைகளைத் தாமே செய்து காட்டுவதன் மூலமாகக் கற்றல் இனிமையானதாகவும் இலகுவானதாகவும் மாணவர்களுக்குக் காட்சியளிக்கின்றது. இதுபோன்ற செயல்பாடுகளால் கற்றலில் மிகவும் பின்தங்கிய மாணவர்கள் ஈர்க்கப்பட்டு மெல்ல முன்னேறத் துணிவர். மேலும், மாணவர்களின் அன்றாட வருகையானது தொடர்ந்து அதிகரிக்கும்.

குறிப்பாக, அண்மைக்காலத்தில் ஆசிரியர்கள் மீது பல்வேறு ஒடுக்குமுறைகள்

கட்டவிழ்த்து விடப்பட்டாலும் அவற்றை தமக்குள் ஆழப் புதைத்துக்கொண்டு சின்னஞ்சிறு ஏழை, எளிய குழந்தைகளின் தெவிட்டாத, கள்ளம்கபடமற்ற நம்பிக்கையுடன் நோக்கும் முகத்தைக் கண்டதும் சூரியனைக் கண்ட பனித்துளி காணாமல் போவதுபோல் ஆசிரியர்கள் குழந்தைகள் உலகத்தில் குதூகலமாகி விடுகின்றனர் என்று தான் சொல்ல வேண்டும்.



ஆசிரியர்களை இழித்தும் பழித்தும் பேசும் வழக்கை வாடிக்கையாகக் கொண்ட சமூகத்தில் தம் துயரங்களைப் புறந்தள்ளி மாணவர்கள் நலனுக்காகப் பாடுபடும் ஆசிரியர் கூட்டம் பெருகிக்கொண்டே இருப்பது உண்மை. ஒரு காலத்தில் சடங்குக்காகவும் சம்பிரதாயத்துக்காகவும் அரசு மட்டுமே தமக்கான விசுவாசம் மிக்க ஆசிரியர்களைப் பாராட்டிச் சிறப்பித்துவரும் நிகழ்வுகள் ஒருபுறம். தன்னலமின்றி மாணவர்கள் நலனுக்காகவும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் தொடர்ந்து தொய்வின்றிப் பாடுபட்டு வரும் உண்மையான நல்லாசிரியர் பெருமக்களை இன்று பல்வேறு முன்னணி ஊடகங்களும் அரசு சாரா அமைப்புகளும் மனமார பாராட்டி மகிழும் கோலாகல கொண்டாட்டங்கள் மறுபுறம். ஆசிரியர்களுள் அனைவருமே நல்லாசிரியர்கள்தாம்! அவர்களுள் யார் மாணவர்கள் மனத்தில் நீடித்து நிலைத்து நின்று இருக்கின்றார்களோ அவர்களே ஒளிரும் ஆசிரியர்கள் ஆவர். தலைமையாசிரியர் திருமதி அன்பரசி அவர்கள் அத்தகைய மாணவர் மனம் கவர்ந்த ஒளிரும் ஆசிரியருள் ஒருவர் ஆவார்.

(இன்னும் ஒளிர்வார்கள்...)

**- முனைவர் மணி கணேசன்**

# என் மகள் தொடருக்கான விமர்சனம்.

கார்த்தி டாவின்சி அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள். திறவுகோல் இதழில் தொடராக வெளிவந்த 'என் மகள்' கதையை எனக்கு பகிர்ந்ததன் மூலமாகவும் அந்த கதையின் தலைப்பு எனக்கு மிகவும் பிடித்திருந்த காரணத்தாலும் உடனே அந்த கதையைப் படித்து விட்டேன். மிகவும் நன்றாக இருந்தது. இந்த சிறிய வயதில் சமூக சிந்தனையுடன் இருப்பது பாராட்டுதலுக்குரிய செயல்.

முதலில் உங்களுடைய கதையின் முடிவு மிக சரியானது. சூர்யா (கதையின் நாயகி) அவர்கள் பெற்றெடுத்த பெண்ணாக இருந்தாலும் கூட அந்த பெண்ணை எரித்துக் கொள்வதற்கு அவருடைய தாய் தந்தைக்கு எந்த உரிமையும் இல்லை. சூர்யாவுக்கு புரியும்படி எடுத்துக்கூறி திருத்தி இருக்கலாம் அல்லது நீ நன்கு படித்து வேலை வாய்ப்பை பெற்ற பின் அவனுக்கே உன்னை திருமணம் செய்து வைக்கிறோம் என்று கூறிய அவருடைய காதலை வேறு விதத்தில் கையாண்டிருக்கலாம்.

இன்றைய இளைஞர்கள் திறமைசாலிகள் மற்றும் புத்திசாலிகள். எதுவும் கூறும் விதத்தில் கூறினால் புரிந்து கொள்பவர்கள் எதிர்காலத்தைப் பற்றிய விழிப்புணர்வுடன் மற்றும் பெண்களின் உணர்வுகளை மிக சரியான விதத்தில் புரிந்து வைத்திருப்பவர்கள். ஆதலால் அவர்களின் காதலை சரியான முறையில் அணுகும் போது அவற்றைப் புரிந்து ஏற்றுக் கொள்வார்கள்.

கதையில் அந்த பெண்ணுடைய அப்பாவிற்கு கிடைத்த இரட்டிப்பு ஆயுள் தண்டனை மிகச்சரியானது. தன் மகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளாத தந்தை வாழ தகுதி இல்லாதவர். நாம் பெற்ற குழந்தையைக் கொல்வதற்கு நமக்கே உரிமை இல்லாதபோது நம் குழந்தை காதலித்த காரணத்தினால் அவளுடைய காதலனத் தண்டிக்கும் உரிமையும் நமக்கு இல்லை. நம் குழந்தைகள் நம் மூலமாக பிறந்தவர்களே தவிர நமக்கு ஊழியம் செய்வதற்காக பிறந்தவர்கள் என நினைப்பது மிகவும் தவறானது.

-- நீலவேணி, (சேலம்)

# தென்னாடுடைய இறைமொழி

அகரத்தில் உதித்தெழுந்து
அகிலத்தை வியப்பூட்டி
சிகரத்தில் என்றென்றும்
சிம்மமாய் வீற்றிருக்கும் செந்தமிழே!

தந்தையர் நாடாகி
சங்கத்தின் ஏடாகி
சான்றாண்மை உயிராகி
சரத்திரத்தில் இமயமாகி
எண்ணங்கள் வண்ணமாக்கும்
எழில்தமிழே!

அலைகளுக்குள் மூழ்கினாலும்
அனலுன்னைத் தீண்டினாலும்
மறத்தோடும் திறத்தோடும்
மலைப்பாகி நிலைத்தவள் நீ....

ஆரியத்தால் எதிர்த்தாலும்
ஆங்கிலத்தால் தவிர்த்தாலும்
தனித்தமிழாய் தலைநிமிர்ந்து
சிறந்தவள் நீ!

தெள்ளமுதாய் உள்ளமெலாம்
இனித்தவள் நீ!

வள்ளுவனின் செல்லமென
தழைத்தவள் நீ!

தோற்றம் அறியப்படா
தொன்மைகொண்டாய்
மாற்றம் நிறையகண்டும்
புதுமைவென்றாய்!

நல்லாற்றுப் படுத்துவதில்
நன்னெறிகள் சுடர்த்துவதில்
தத்துவங்கள் மலர்த்துவதில்
தப்புகளைத் திருத்துவதில்
ஒப்பில்லை உனக்குநிகர்!
தித்திக்கும் முத்தமிழே
தெய்வீகத் தேன்கடலே....

எந்நாட்டவரும் வியந்துநோக்கும்
தென்னாடுடைய இறைமொழியே
விண் இடிந்து  வீழ்ந்தாலும்
மண் கரைந்து மாய்ந்தாலும்
பொன் திரிந்து தாழ்ந்தாலும்
கண் எரிந்து தீய்ந்தாலும்
என்றும் நிலைத்திருந்து
ஏற்றங்கள் விலைத்திருந்து
ஆற்றலுடன் ஆள்வாய் நீ உலகை....

ஆனந்தத்தில் ஆழ்வோம் உம் மதலை...

## - பொன்.தெய்வா
ஐவேலி

# என் உயிர் அம்மா..

உன்தன் மடியினில் கிடந்தால் என் கவலைகள்
பறந்தோடுகிறது...
பள்ளி சென்று வீடு திரும்பும் போதெல்லாம் தேடினேன், உன்
குரல் எங்கு ஒலிக்கிறது என

சிறு வயதினில் உறங்கும் போதெல்லாம் தேடினேன், உன்
அரவணைப்பை
உன் அரவணைப்பு இல்லாமல் தூங்கிய நாட்கள் அரிது

எனக்கு பிடித்தவையெல்லாம் செய்து கொடுக்கும் உன்
பாசத்தின் முன் தோற்று போகும் என் ஏக்கங்கள்

எனக்கு ஆசைபட்டு கிடைக்காத விசயங்கள் குறைவே, அதற்கு
காரணம் நீ என் அம்மாவாக ஆனதால்

அப்பாவின் பாசம் கிடைக்காமல் நான்
கவலைப்பட்ட போதெல்லாம் எனக்கு அப்பாவாக இருந்தது நீ...
குடும்பத்தை சுமக்கும் பாரத்தை அப்பா கொண்டதால் எங்கள்
சந்தோசத்தை காக்கும் பணியை நீ கொண்டாய்

யாரிடமும் என்னை விட்டுக்கொடுக்காத உன் பாசத்தினால் தான்
வாழ்க்கையில் நான் முன் செல்கிறேன்..


என்றும் உன் சந்தோஷத்தை அதிகப்படுத்தவே நினைக்கிறேன்
நான்
கவலைகளை விடு, உன் மகன் நான் இருக்கிறேன் என்றும், உன்
சந்தோஷமே உன்னிடம் நான் பட்ட கடனுக்கு நான் கழிக்கும்
வட்டி...

## உ. சாமிதுரை,

அசேசம், மன்னார்குடி.

மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 16)



# செண்பக வனம்

ஒன்றன்பின் ஒன்றாக அந்த மூன்று குச்சிகளையும் எடுத்து பார்த்த மாரிராசர், பின்பு இரண்டை கீழே வைத்து விட்டு ஒரு குச்சியை மாத்திரம் எடுத்து அதனை அணுஅணுவாக தன் கையில் உள்ள சிறிய உலோகத்தின் மூலம் சுரண்டிக் கொண்டே சென்றான்.
ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு செல்வதற்கு சற்று முன்பே ஒரு இடத்தில் அது தடைபட்டு வெள்ளையாக ஏதோ ஒன்று அந்த உலோகபட்டையில் ஒட்டியது. அந்த இடத்தை சுற்றியே மெல்ல மெல்ல சுரண்டி பார்த்ததில் அது ஒரு அடைப்பு போல் தோன்ற, அதனை மெல்ல பிடித்து திருகி திறந்து எடுத்தார். அதிலிருந்து ஒரு சுருள் ஒன்று வெளியே விழுந்தது, அதேபோல மற்ற இரண்டு குச்சிகளில் இருந்தும் உள்ளே உள்ள சுருள்களை வெளியே எடுத்தார்கள்.

சின்னவர் களத்தின் காட்சி மேடை,
சிறிய ஆலோசனை மையமாக மாறி இருந்தது.
அங்கே சின்ன பழுவேட்டரையரும், அனிருத்தரும்; ஒன்றன் பின் ஒன்றாக ஓலையை படித்துக்கொண்டிருக்கும் மாரிராசரின் முகபாவையை பார்த்து ஏதோ பெரிய விபரீதம், இந்த சின்ன ஓலை துண்டுகளில் ஒளிந்திருக்கிறது என்று மட்டும் புரிந்து கொண்டார்கள். ஓலைகளை படித்து முடித்து ஆழ்ந்த சிந்தனையில் சில நொடிகள் இருந்தவர், சட்டென எழுந்தார். ''இன்று தஞ்சைக்கோட்டை பேராபத்தில் இருக்கிறது, அதனை எதிர்கொள்ள நீங்களும் நானும் கோட்டைக்குள் இருக்க வேண்டும். மற்ற இரண்டு ஓலைகளைப் பற்றி போகும் வழியில் விவரிக்கிறேன் வாருங்கள் விரைவாக'' என்று சொல்லிக்கொண்டே காட்சி மேடையின் படிகளை நோக்கி விரைந்து கொண்டிருந்த மாரிராசர் படிகளின் அருகே நின்றிருந்த பார்முகிலனிடம் ''முகிலா திறமையான வீரர்களுடன் கோட்டைக்கு வா, அதிக எண்ணிக்கையில் வேண்டாம். அவர்கள் நம்பிக்கையான வீரர்களாக இருக்க வேண்டும்.'' என்று சொல்லிக்கொண்டே படிகளில் இறங்கிய அவரின் மனம் கண்டராதித்த புறத்தை எண்ணி சற்று கலக்கமுற்றது.

தஞ்சை கோட்டையோ திருவிழா கோலத்தில் திலைத்திருந்தது .கட்டியக்காரனின் இடி முழக்கம் குரல், வந்தியத்தேவரின் விருதுபெயர்களையும் புகழையும் எடுத்து சொல்லிக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் வந்தியத்தேவரின் இரதம் கோட்டை வாசலை அடைந்திருந்தது. இரட்டை குதிரை பூட்டப்பட்ட அந்த அழகிய ரதத்தில் சோழநாட்டு சேனாதிபதி வந்தியத்தேவரும் பிற்காலத்தில் கங்கையும் கடாரமும் கொண்ட ராஜேந்திர சோழனான மதுராந்தகரும் வர, அதன் பின்னால் வந்த ரதத்தில் வந்தயத்தேவரின் ராணிகள் வர ''முரசு'' சத்தம் ''எக்காள'' ஒலியும் காதைக் கிழித்தன.

கோட்டைகுள்ளே நுழைந்த இரதம் செம்பியன்மாதேவி அம்மையார் நின்றிருந்த இடத்திற்கு முன்பே நின்றது. வந்தியத்தேவனும் அவர்தம் ராணிகளும் கீழே இறங்கி செம்பியன்மாதேவி அம்மையாரை வணங்க, அம்மையாரும் பூரண கும்பத்துடன் வந்தவர்களுக்கு மரியாதை அளித்து அவர்களை கொற்றவை கோவிலுக்கு அழைத்து சென்றார். வழிதோறும் மாவிலை தோரணம் தென்னங்குருது என்று கோட்டையே விழாக்கோலம் பூண்டிருந்தது. அதே நேரத்தில் மாணிக்கமும் கரியனும் கோட்டையின் தெற்குவாசல் வழியாக உள்ளே நுழைந்தார்கள். ஒரே வீதியில் தெற்குவாசலின் சமீபத்தில் இருக்கும் கொற்றவை கோவிலுக்கு வடக்கு வாசலிலிருந்து ஊர்வலம் போல அரசகுடும்பதினர் வந்துகொண்டிருக்க, அதன் மறுமுனையான தெற்கு வாசலிலிருந்து ஊர்வலத்தின் நேரெதிரே செல்ல முயன்ற மாணிக்கத்தின் இரதம் காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது.

அப்போது ஏற்பட்ட சிறு பதட்டத்தில் படுத்து கிடந்த கரியன், எழும்ப முயல ஒற்றை பார்வையில் அடக்கினான் மாணிக்கம். வீதியின் ஓரமாய் நின்றிருந்த இரண்டு யானைகள் திடீரென திமிரி எழுந்து பிளிரியது. அந்த பிளிறல் சாதாரண பிளிறல் அல்ல, மதம்பிடித்த யானையின் பிளிறல். அந்த சப்தம் கேட்ட மாத்திரத்தில் அந்த வீதியே ஒரு நொடி பீதியில் ஆழ்ந்தது.

பாகன்கள் இல்லாத அந்த மதம் கொண்ட யானைகள் தங்களுக்குள் ஆக்ரோசமாக மோதிக்கொண்டன. அந்த மோதல் சில நொடிகளில் திசை மாறி வீதியிலுள்ள மக்களின் மீது திரும்பியது. கண்ணில் பட்டவர்களை எல்லாம் தூக்கி வீசியது, அடித்தது. சற்று முன்புவரை மகிழ்ச்சி கடலாக இருந்த அந்த வீதி, கலவர பூமியாக மாறியது. செய்வதறியாது தவித்து கொண்டிருந்த வீரர்கள் யானையை கட்டுப்படுத்தி, அடக்க முற்பட்டனர். ஆனால் அந்த யானைகள் ''மோல யானை '' அதுமட்டுமல்லாமல் அவைகளை செயற்கை முறையில் வெறியேற்றி மதம் பிடிக்க வைத்துள்ளார்கள். இனி அவைகளை அடக்க முடியாது கொல்லதான் வேண்டும் என்று முடிவெடுத்தனர் கோட்டை காவல் படைவீரர்கள். அதற்கான ஆயத்த பணிகளில் அவர்கள் இறங்கினார்களா ?..

தொடரும் ....

# ஒரு மணப்பெண்ணின் நித்திரைக் கனவுகள்

நீ எனக்கு உதயமான நாள் முதல்
நான் உனக்கு, என்னமோ
தெரியவில்லை
என்னை அறியாமலேயே
அடிமையானேன்.,

விழியை விண்மீனாகக் கொண்டு
வானவில் என்னும் வாழ்க்கையை
தந்தாயே

எள்ளி-நகையாடாமல்
என்னை உயிராக எண்ணினாய்,

அந்தி வான காட்சியை பதிவு செய்த
அந்த வேளைகளில்
பதிவிறக்கம் ஆகிறாய் என்னுள்;

பார்க்க வேண்டாம் என்று எண்ணி
விலகிதான் போகிறேன்

ஆனால் விழி தேடுவதோ உன்னை
மட்டும்தான்,

உயிர் போகிறது என்றாலும்
உன்னால்தான்
உயிர் பெறுகிறேன் என்றாலும்
உன்னால்தான்

உனை பிரிந்திருக்கின்ற இந்த நாட்கள்
ஒவ்வொன்றும் உனக்காக ’சேமிக்கின்ற
உணர்வுகள் யாவும்’
கொன்று குவிக்கின்றன உன்
நினைவுக்கூடமாய்!

வாழ்வாதாரம் தேடி அலையும்
பாலைவனப்போராளி ஆகிப்போனேன்,

இந்த இரக்கமற்ற நிமிடமுள்ளில்
சிக்கிய மீனாகிப்போனேன்

பட்ட கிளையினை தொட்டு தொட்டு
வண்ணத்தாரிகையால்
வளமாக்கிவிட்டாய்

வளர்ந்தது எண்ணமோ உன்மீது
மரியாதை கொண்ட அன்பு மட்டுமே

தூரமிருந்தும் ரசித்திட ஜன்னலோர
நிலவாய்,
தொட்டுச்செல்லும் தென்றல்
கூட்டங்களாய்,
கட்டித்தழுவும் இனிய ஓசைகளாய்,

சத்தமில்லாமல் சேமித்துவருகிறேன்
உன்னிடத்தில் அளிப்பதற்கு
என்னுடைய அன்புகொண்ட
முத்தங்களை சத்தமுடன் தருவதற்கு!

கொண்டு செல்ல எதுவுமில்லை
எனக்கு,
கொடுத்துச்செல்லவும்
எதுவுமில்லை
அன்பினைத்தவிர
உனக்கு

கருணைக்கொலை செய்ய உன்னால்
மட்டுமே முடியும் உன் பார்வைக்காக
ஏங்க வைத்தே!

குருதி பாய்கின்ற இந்த
செல்லுள்ளெல்லாம் சேர்ந்தே
பாய்ந்தோடும் உன் எண்ணங்கள்,
சுருண்டு விழ செய்திடும் அந்த
நெற்றிப் புருவத்திமிரும்,
குழந்தை தன்மையை காட்டிடும்
கொள்ளை இதழும் உன்னிடத்தில்
ஓவியமயமாய்

வெட்டிய நகங்களாய்
கொட்டிய
வார்த்தைகளை(சினத்துடன்)
திரும்ப அள்ளிக்கோர்க்க ஆசை
கொள்வதில்லை எந்நாளும்

நினைவுகள் எங்கும்
சோலையாகிப்போனது
நீ வந்த நிமிடம் முதல்

அவற்றை தினந்தோறும்
எண்ணிலடங்கா
என் எண்ணங்களாய்
ஊற்றி
வளர்த்து வருகிறேன்

உனை சேர்கின்ற
அந்த மணநாளை எண்ணிக்கொண்டு

- அகிலா தியாகராஜன்
ஆயக்காரன்புலம்

---

# நெடுந்தூர பயணம்

எழுத்துரு எண்ணம்
பா.மாதவன்,
இராசமன்னார்குடி



நின்விழியால் என் விழி கண்டு
உன் மடியில் எனை நீ சுமந்து
நீ தரும் சமிக்ஞைகள் எதிர்வருவோருக்கு எச்சரிக்கையாக
இடையிடையே இளைப்பாறியபடி
வெயிலில் எனை குளிர்வித்து
மழையில் எனை கதகதத்து
சீதோஷ்ண நிலையில் எனை சீர்படுத்தி
பள்ள மேடு என பாராமல் எனை ஆடம்பரமாய் அழைத்து செல்லும் அன்பே

உன்னுடன் பயணிக்க தகுந்த பயிற்சியுடன் சென்றால் மட்டுமே தான் பலனுண்டு....
பயணிப்போம் நாம் நல்லதொரு நட்புடன்....
(மகிழுந்து பயணம்)



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

# லட்சியம்

லட்சியத்தை மட்டுமே மனதில் கொண்டு உழைத்தால் லட்சங்கள் தானாக வரும்!!

ஆனால் லட்சங்களே லட்சியம் என்று நினைத்து செயல் பட்டால் வாழ்வில் மிச்சம் என்று எதுவும் இருக்காது. எனவே லட்சங்களை துச்சமாக மதித்து லட்சியங்களை உச்சமாக கொண்டு செயல் பட்டால் வெற்றி நிச்சயம்!!

வீழ்ச்சியும் எழுச்சியும்

அருவியின் வீழ்ச்சி
நதியின் எழுச்சி !

நதியின் வீழ்ச்சி
வறட்சியின் எழுச்சி!

வறட்சியின் வீழ்ச்சி
மழையின் எழுச்சி!

மழையின் வீழ்ச்சி!
விஞ்ஞானத்தின் எழுச்சி!

விஞ்ஞானத்தின் வீழ்ச்சி!
இயற்கையின் எழுச்சி!

இயற்கையின் வீழ்ச்சி!
அழிவின் எழுச்சி !!

# விஜயநகர பேரரசு


திருச்சி பார்த்தி

14ம் நூற்றாண்டில் மாலிக்காபூரின் தென்னக படையெடுப்பிற்குபின் குலைந்துபோன நம் சாம்ராஜ்யத்தை மீட்டெடுத்தவர்கள் விஜயநகரபேரரசினர். அவர்களை பற்றி அறியும் ஆவல் இருந்ததில்லை ,காரணம் நம் மூவேந்தேர் வரலாறுகளே இன்னும் அறிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்க, இவர்கள் வரலாற்றை அறிய இயல்பாய் எண்ணம் வரவில்லை, சமீபத்தில் சாளுக்கியதேசத்திற்கு ஓர் வரலாற்றுக்குழு ஏற்பாடு செய்திருந்த நிகழ்விற்கு சென்றிருந்தேன், நேரில் கண்டபின் அப்பேரரசின் அன்றைய விரிவாக்கம் குறித்தும், சிதைக்கப்பட்ட அந்த தலைநகரின் அவலநிலையையும், துரோகத்தால் வஞ்சிக்கப்பட்ட அப்பேரரசு குறித்த தகவலை தேடி படிக்க ஆரம்பித்ததில், நான் படித்த தகவலை சுருக்கமாய் பதிவிடுகிறேன். இதில் முக்கிய பகுதியாக பேரரசின் வீழ்ச்சிக்கு அடிகோலிய ராமராயரையும், அதனால் அவர் அடைந்த கொடூரத்தையும் பார்ப்போம்.

விஜயநகரத்தின் தோற்றம்:

ஹொய்சாள மன்னர் மூன்றாம் வீரவல்லாளனிடம் வேலை பார்த்தவர்கள் சங்கமன் என்பவரின் மகன்கள் ஹரிஹரன், புக்கரன், கம்பணன், மாரப்பன், முத்தப்பன் என்ற ஐவர்கள். 1343ம் ஆண்டு வீரவல்லாளன் போரில் தோற்று கண்ணனூர்-கொப்பம் எனுமிடத்தில் மதுரை சுல்தான் கியாத்-உதின் என்பவரால் சாட்டையால் அடிவாங்கி, உயிருடன் உடல்முழுவதும் தோலைஉரித்து, தோலுரிப்பதென்றால் உண்மையாகவே உரித்தகோழிபோல் ஆக்குவது. கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். இக்கதை இன்றும் தமிழகத்தின் தென்பகுதிகளில் வீரவல்லாளன் சிந்து என பாடப்பட்டு வருகிறது. இறக்கும்போது இவருக்கு 70 வயதிற்குமேல் இருக்கும். இவரது மகனுக்கு வாரிசின்மையால், வடக்கு எல்லையான ஹோஸ்பேட் பகுதியில் ஹரிஹரனை மகாமண்டலீஸ்வரனாய் நியமனம் செய்தார் என கருதப்படுகிறது. இரண்டாம்தம்பி புக்கன் அனந்தப்பூர் மாவட்டத்தில் ஆளுநராக்கப்படுகிறார். மூன்றாம் தம்பி மாரப்பன் கடம்பர்களிடமிருந்து கொங்கனியை கைப்பற்றுகிறார். சந்திரகுத்தி, ஷிமோகா பகுதிகளில் இவர் ஆட்சி நடைபெறுகிறது.

சுற்றிலும் மலைகள், துங்கப்பத்திரை நதியின் நீர்வளம், அங்குள்ள சுழல்கள், முதலைகள் இவற்றைத்தாண்டி படைகள் நுழைவது கடினம் என கருதி, தங்கள் சாம்ராஜ்யத்தின் தலைநகரை இன்றைய ஹம்பி என அழைக்கப்படும் பகுதியில் அமைத்தனர். இதற்கு முக்கிய காரணம் முகம்மதியர் ஆட்சி தென்னகத்தில் பரவவிடக்கூடாது என்ற எண்ணமே.



இவ்வம்சத்தில் ஹரிஹரர், புக்கருக்கு அடுத்து பலர் ஆண்டாலும், குறிப்பிடத்தக்கவர் கிருஷ்ணதேவராயராவார்.

கிருஷ்ணதேவராயர்:
இவர் 1509-1530 வரை ஆண்டவர். இவரது சீர்மிகு ஆட்சி குறித்து நிறைய கல்வெட்டுகள், செப்பேடுகள் மற்றும் பெரிஸ்டா, பாரோஸ், கூட்டா முதலிய வரலாற்றாசிரியர்களும் எடுத்துக்காட்டியுள்ளனர். ஹம்பியிலுள்ள விருபாக்ஷர் கோவிலின் கல்வெட்டுப்படி தன் 22ம் வயதில் 1509ம் ஆண்டு, ஜீன் மாதம் பதவியேற்றது தெரிகிறது. பாமினி சுல்தான் பீஜப்பூர் சுல்தான்களிடம் அடிக்கடி போர் நிகழ்த்தி வென்றுள்ளார். அதிலும் இஸ்மேயில் அடில் அடிஷா எனும் சுல்தான் அடிக்கடி போரிட்டுள்ளார்.

தன் இறுதிகாலத்தில் தன் தம்பி அச்சுதராயரை முடிசூட்டுகிறார். இதன்காரணம் கிருஷ்ணதேவராயனின் மகனுக்கு ஒன்றரை வயது கூட நிரம்பாத குழந்தையாக இருந்ததே, இதனால் கிருஷ்ணதேவராயரின் மருமேகன் ராமராயர் குழந்தையை அரசனாக்கி தான் வழிநடத்த முன்வந்தார். இதனால் அச்சுதருக்கும், ராமராயருக்கும் உடன்பாடு தோன்றி அச்சுதர் அரசரானார். கிருஷ்ணதேவராயரின் சிறுகுழந்தை இறந்துவிட, அவரின் அண்ணன் மகனை அரசனாக்க முனைந்தார் ராமராயர், அச்சமயம் அது ஈடேறவில்லை.  1542ல் அச்சுதர் இறக்க, ராமராயரின் ஆசியில் சதாசிவராயர் ஆட்சிலேறினார். பெயரளவில்தான் சதாசிவராயர் ஆட்சி, ஆனால் அதிகாரம் செலுத்தியதோ ராமராயர். இந்த ராமராயர் ஆட்சியில்தான் மிகப்பெரிய விஜயநகர சாம்ராஜ்யம் துரோகத்தால் வீழ்ந்தது,

விஜயநகரப்பேரரசின் வீழ்ச்சியின் ஆரம்பம் :

கிருஷ்ணதேவராயரின் மகன் இறந்ததும், ராமராயரின் வலு குன்றியது. அக்குழந்தை இறந்ததும் அச்சுதராயரின் போக்கும் மாறியது. ஆகவே ராமராயர் தன்பக்கம் வலுசேர்க்க தன்படையிலிருந்த பழைய வீரர்களை நீக்கிவிட்டு தன் உறவினர்களையும், நண்பர்களையும் தளபதிகளாய் நியமித்தார். இதற்கிடையில் 1535ல் பதவியேற்ற பீஜப்பூரின் புதிய சுல்தானான இப்ராஹீம் அடில்கான் பதவியிலிருந்து நீக்கிய 3000

இஸ்லாம் படைவீரர்களை தன்படையில் சேர்த்தார் ராமராயர். கிருஷ்ணதேவராயர் பீஜப்பூரை முன்னர் அழித்ததை மனதில் வைத்த பீஜப்பூர் சுல்தான் இப்ராஹிம் விஜயநகரின் அப்போதைய குழப்பமான சூழலை பயண்படுத்தி விஜயநகரத்தை முற்றுகையிட்டார். நாகலாபுரத்தை தரைமட்டமாக்கினார். இருவரில் எவரேனும் ஒருவரோடு சுல்தான் இணைந்தால் ஆபத்து என்பதையுணர்ந்த இருவரும் சமாதானம்பேச இப்ராஹீமை அழைத்தனர். அச்சுதனே அரசனாகவும், அவனுக்கு கீழடங்கிய ஏதோ ஓர் பகுதியில் சுதந்திரஅரசனாய் ராமராயர் தொடரலாம் என ஒருவாறு முடிவுக்கு வந்தனர். இவ்வொப்பந்தம் அச்சுதன் இறக்கும் வரையிலும் தொடர்ந்நது.

அச்சுதன் இறக்கவும் அவன் மகன் வேங்கடன் அரசனானான், அவன் வயதில் இளைஞனாய் இருந்ததால், அவன் தாய்மாமன் திருமலை அவனுக்கு பதிலாக ஆட்சிநடத்தினான். மக்களின் அதிருப்தியை இருவரும் சம்பாதித்தனர். இந்நிலையில் மறுபுறம் சுல்தான்கள் தங்கள் செல்வாக்கை பெருக்க ஆரம்பித்தனர். இந்நிலையில் வேங்கடனின் தாய் தன் தமையனின் அராஜகத்தை போக்க அடில்கானிடம் உதவிகோரினார். அடில்கானும் படையை திரட்டி விஜயநகரம் வர, திருமலை பெரும்பணம் கொடுத்து வரும்வழியே திரும்பி போக கெஞ்சி கேட்க, ராமராயனோ சதாசிவத்தினை மன்னனாக்க அதே அடில்கானிடம் வேண்டினான். அதனையேற்ற அடில்கான் விஜயநகரை நோக்கி படையெடுத்தான். இதில் திருமலை வெற்றிபெற, தனக்குபின் அரசனாக இனி எவரும் முயற்சிபெற கூடாதென தன் சகோதரி, சகோதரிமகன் வேங்கடன் என அனைவரையும் கருவறுத்தான். ராமராயன் தன் ஆதராளவர்களுடன் படையெடுத்து பல போர்களுக்குபின் முடிவில் திருமலையை துங்கபத்திரை கரையில் வெட்டி வீழ்த்தினான். இவ்வளவு ரத்தகளறியுடன் வெறியாட்டம் ஆடி 1543ல் சதாசிவத்திற்கு முடிசூட்டினான் ராமராயன்.

பெயரளவில் சதாசிவம் ஆண்டாலும் ராமராயனே அனைத்து அதிகாரத்தையும் கையிலெடுத்தான். இரண்டாம் தேவராயர் காலத்திலே முஸ்லீம் வீரர்களை படையில் சேர்க்கும் பழக்கம் இருந்தது, ஆனால் அவர் முடிவெடுக்கும் முக்கிய பதவிகளை தருவதை தவிர்த்தார், இந்த கோட்பாட்டை ராமராயன் கடைபிடிக்கவில்லை, அதிகளவில் படைகளில் சேர்த்தான். பல உயரிய பதவிகளை அளித்தான். இதனால் அலுவலக முக்கியவிஷயங்களை அவர்களும் தெரிந்து கொண்டனர்.

இவர்களில் முக்கியமான தளபதிகள் ‘‘கிலானி சகோதரர்கள்‘‘. இவர்கள் மிக முக்கிய பொறுப்புகளில் இருந்தனர்.

மேலும் தக்காண முஸ்லீம்கள், ராஜ்ய விவகாரங்களில் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் ராமராயன் தலையிட்டு, அவர்களுக்குள் ஒற்றுமையேற்படாத வண்ணம் பார்த்துக்கொண்டான். இந்த ஐந்து சுல்தான்களுக்குள்ளும் போர்வரும்போது அந்த விவகாரத்தில் விஜயநகர அரசன் கலந்து கொண்டு சமாதனம் செய்ய வேண்டும், என உடன்படிக்கை மேற்கொண்டனர்.

இவர்கள் ஒன்றுசேர்ந்தால் பாதிப்பு தனக்குதான் என ராமராயன் எண்ணினான். தங்களுக்குள் ஒற்றுமையின்மை இருப்பதாலயே ராமராயன் தங்களை பயன்படுத்திவருவதை உணர்ந்து கொண்டனர் ஐந்து சுல்தான்களும்.

சுல்தான்கள் குறித்து சிறிய முன்கதை சுருக்கம்:



டெல்லி சுல்தான் முகம்மது பின் துக்ளக்கின் ஆட்சி காலத்தில் தக்காண பகுதிக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டவர் அலாவுதீன் ஹாசன் பாமினி ஷா என்பவர். தாஜிய-பாரசீக வம்சத்தில் வந்த இவர் 1347ம் ஆண்டு ஆகஸ்ட் 3ம் நாள் டெல்லி சுல்தானை எதிர்த்து, தனது ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளை தனி சுதந்திர அரசாக அறிவித்தார். இதன் பிறகு 1425ம் ஆண்டு வரை அஸன்பாத் (இன்றைய குல்பர்கா) நகரை தலைநகரமாக கொண்டு பாமினி சுல்தான்கள் ஆண்டு வந்தார்கள். 1425ம் ஆண்டு தலைநகர் முகம்மதாபாத் (இன்றைய பைதர்) நகருக்கு மாற்றப்பட்டது.

இதன் பிறகு இந்த பேரரசு, விஜயநகர பேரரசால் கட்டுப்படுத்தப்பட்ட போதிலும், முகம்மது கவுன் (1466 - 1481) ஆட்சி காலத்தில் தனது உச்சத்தை அடைந்தது. இவரது காலமே பாமினி பேரரசின் பொற்காலமாக விளங்கியது. இதற்கு பிறகு தனது வீழ்ச்சியை அடையத்தொடங்கிய இந்த பேரரசு 1518ம் ஆண்டு ஐந்து பகுதிகளாக பிரிந்தது. அவைகள் அகமதுநகர் சுல்தானகம், கோல்கொண்டா சுல்தானகம், பிஜப்பூர் சுல்தானகம், பீதர் சுல்தானகம் மற்றும் பேரர் சுல்தானகம் ஆகும். இந்த ஐந்து சுல்தானகங்கள் பின்னாளில் தக்காணத்து சுல்தானகங்கள் என அழைக்கப்பட்டன.

வீழ்ந்தது விஜயநகரம்:

ராமராயன் தன் வாழ்க்கையை சாதாரண அலுவலனாக கோல்கொண்டாவில் தன் வாழ்க்கையை தொடங்கியவன். ஆதலால் கோல்கொண்டாவின் அரசியல் விவகாரங்கள் அவனுக்கு ஓரளவு அத்துப்படி. இப்ராஹிம் கோல்கொண்டாவின் அரசனாகும்முன் தன்சகோதரனின் தொல்லையிலிருந்து தப்ப விஜயநகரை நாடினான். 1550ல் தன்சகோதரன் இறந்ததும் அரசனாக இப்ராஹிம்ற்கு உதவினான். தொடக்கத்தில் இருவரும் நண்பராக இருந்தாலும், ராமராயன் அகமது நகருக்கு எதிராக அடிக்கடி

போரிட அழைத்ததை இப்ராஹிம் விரும்பவில்லை. தன்னலமே இருவருக்கும் பிரதானமாய் இருந்தது, தன் கையை வைத்தே தன் கண்ணை குத்தவைக்கும் யுக்தியை ராமராயன் கையாள நினைத்தான்.

விஜயநகரபேரரசின் தொடர்தாக்குதலில் மற்ற சுல்தான்களை விட அதிகம் பாதிப்படைவது இப்ராஹிம் குதுப்ஷாவும், ஹீசைன் நைஜம்ஷாவும்தான், இவர்கள் இருவருமே விஜயநகருக்கெதிராக வலுவான முஸ்லீம் கூட்டணி உருவாக காரணமானவர்கள்.

விஜயநகர் சீரழிய முக்கிய காரணங்கள்:

அகமதுநகர், கோல்கொண்டா மீது படையெடுத்த விஜயநகரவீரர்கள், அங்குள்ள பெண்கள், முதியவர்கள், குழந்தைகளை கொன்றழித்தது மட்டுமின்றி, முஸ்லீம்களின் புனிதமான வழிபாட்டுதலங்களை நாசப்படுத்தினர், இது சுல்தான்களையும், பொதுமக்களையும் கொதிப்படையசெய்தது. இந்த நிகழ்வே பிற்காலத்திய தலைக்கோட்டை போருக்கும், அதன்பின் நடந்த கொடூரமான விஜயநகர பேரழிவிற்கும் காரணமாய் அமைந்தது.

பீஜப்பூர், அகமதுநகர் சுல்தான்கள் மணஉறவின் மூலம் தங்கள் நெருக்கத்தை அதிகப்படுத்தினர், அகமதுநகர் சுல்தானின் மகள் சாந்தபிபீயை அலிஅடில்ஷா மணந்துக் கொண்டார், அதன்மூலம் அவருக்கு கோலாப்பூர்கோட்டை சீதனமாய் கிடைத்தது, இப்ராஹிம்ஷாவும், பீடார் சுல்தானும் இத்திருமணநிகழ்வில் கலந்துகொண்டனர். சுல்தான்களின் ஒற்றுமையை ராமராயன் அறிந்திருக்கவில்லை. சுல்தான்கள் தக்க தருணத்தை நோக்கி காத்திருந்தனர். இந்நிலையில் பீஜப்பூர் சுல்தான் தூதுவனை அனுப்பி தன்னிடமிருந்து பிடித்த ராய்ச்சூர், முதுகல் கோட்டையை திருப்பிதருமாறு வேண்டுகோள் விடுத்தான். வழக்கம்போல் ராமராயன் தூதுவனை அசிங்கப்படுத்தி திருப்பி அனுப்பினான்,

சுல்தான்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்தது 1564ம் ஆண்டு பீஜப்பூர் சமவெளியில் தன் படைகளை கூடும்படி அனைத்து சுல்தான்களும் உத்தரவிட்டனர். கிருஷ்ணாநதியின் வடகரையிலுள்ள ராட்சசி-தாங்கிடி என்ற இடத்தில் படைகள் முற்றுகையிட்டன.

ராமராயனுக்கு ஓர் அசட்டுதைரியம் 20 ஆண்டுகளுக்குமேல் போர்அனுபவம் கொண்ட தன்முன் இப்படைகள் என்ன செய்யுமென, நினைத்துவிட்டார். கிருஷ்ணாநதியின் தென்கரையிலிருந்து -இலங்கை வரை பரவியிருந்த தன்படையினை அழைத்தார் ராமராயர். இருதரப்பு படைகளும் சுமார் ஒரு மாதம் முற்றுகையிட்டு எதிர்த்தன. நைஜாம்ஷாவும், குதுப்ஷாவும் கடுமையான தோல்வியடைந்தனர். வலிமைமிக்க ராமராயனோடு சமாதனம் பேசுவதுபோல் முதலில் வந்தனர். அதற்கான

பேச்சுவார்த்தையும் நடந்தது. மறுபறம் ராமராயனின் முக்கிய தளபதிகளான கிலானி சகோதரர்களிடமும் ரகசியமாய் பேசினர் சுல்தான்கள்.

வரலாற்றாசிரியர் பெரிஷ்டா தன் குறிப்பில் விஜயநகர பேரரசு அன்றைய போரில் ஒன்பது லட்சம் காலாட்படை, 45 ஆயிரம் குதிரைவீரர்கள், 2 ஆயிரம் யானைனைகளை ஈடுபடுத்தியதாக கூறுவார். கிருஷ்ணாநதியை கடக்க முடியாதவாறு முதலில் பின்வாங்கி, பின்னர் முன்னேறியது சுல்தான்படை, இதை எதிர்பார்க்காத ராமராயன் தானே களத்தில் இறங்கினார் ஜனவரி 23 செவ்வாய்க்கிழமை இரண்டு படைகளும் நேருக்குநேராய் சந்தித்தன. அகமது நகர் சுல்தானின் 600 பீரங்கிகள் களத்தில் இறங்கியது. அதில் முக்கியமானது Malik-e-maidan எனப்பட்ட பீரங்கி முக்கியமானது. இதனை மைதானத்தின் நாயகன் என அழைத்தனர். ஏகப்பட்ட வீரர்களை இது காவு வாங்கியது.

கிலானி சகோதரர்களின் துரோகம் :

திடீரென ஒரு திருப்பமாய் கிலானி சகோதரர்களின் உத்தரவு வேறுமாதிரி வர, விஜயநகரப்படையிலிருந்த முஸ்லீம் வீரர்கள் தன் படையினரை கணிசமாய் வெட்டி வீழ்த்த ஆரம்பித்தனர். அதிர்ந்த ராமராயன் பல்லக்குத்தூக்கிகளின் துணையுடன் தானே களம் புகுந்தான்.  பல்லக்கிலிருந்தே நவரத்தினங்கள், பொற்காசுகளை வீரர்களை நோக்கி வீசினார், காசினை பொறுக்கிய வீரர்கள் வீறுகொண்டு எழுந்து தாக்கினர். அச்சமயம் காயமுற்ற யானை ஒன்று பல்லக்குநோக்கி பிளிறி வர, உயிருக்குபயந்த வீரர்கள்(?) பல்லக்கைவிட்டு ஓட்டம்பிடித்தனர்.

சுல்தான்கள் கைகளில் சிக்கினான் ராமராயன்.
அகமதுநகர சுல்தானிடம் கொண்டுசென்றனர்.

ஆத்திரத்தில் கீழே தள்ளினார் சுல்தான். தெய்வம் என்னை எது வேண்டுமானலும் செய்துகொள்ளட்டும் என அப்போது ராமராயன் கூறியதாய் பெரிஷ்டா கூறுகிறார். ஒரே வீச்சில் சுல்தான் தலையை அரிந்தான். முகமெங்கும் ரத்தக்களரியான தலையை ஓர் ஈட்டியில் குத்தி கூடாரத்திலிருந்து வெளியே கொண்டுவந்தார் சுல்தான்.

விஜயநகரை சுல்தான்கள் ஆறுமாதம் வைச்சி செஞ்சதை அடுத்த வாரம் பார்ப்போம்.

--
தகவல் திருச்சி பார்த்தி

# மழைநீர் சேமிப்பு

மானிடரே!!
மண்ணில் பிறந்தாய்!!
முத்துகளாய் சிரித்தாய்!!
வறுமை என்று சொல்லும்
நிலையில்லை உமக்கு!!
வலி என்றாலும் அழவில்லை!!
வயது முதிர்ந்தது இன்று!!

வந்தது வறுமை
உனக்கு!! நான் அன்று உன்னை தேடி
தேடி வந்தேன்!!

நீ என்னை அலட்சியம் செய்தாய்!!
ஓடி ஓடி உழைத்து வியர்வை சிந்தி!!
விலை மதிப்புள்ள நகைகளை
வாங்கினாய்!!

எந்த விலையையும் உன்னிடம் நான்
கேட்கவில்லை!!

இலவசமாக வந்தேன் உன்னை தேடி!!
ஒருதுளி நீ என்னை சேமிக்க
மறந்தால்!!

ஆயிரம் அடி உள்ளே சென்று!!
நீ என்னை எடுக்க வேண்டும்!!

இந்த பூமியில் நெகிழியை இட்டாய்!!
அதனால் என்னால் என் பூமி தாயின்
உடலில் ஊடுர முடியவில்லை!!

என் நண்பர்களையும் வெட்டினாய்!!
அதனால் என்னால் என் பூமி தாயை
சேர முடியவில்லை!!

உம் மாளிகையில் எனக்கு ஒரு சிறு
தொட்டி அமைத்து இருந்தால்
நான் உன்னையும்,உன் சந்ததியையும்
பசுமை பூமியில் வாழ
வைத்திருப்பேன்!!

இன்று நீ என்னை அழைக்கிறாய்!!
ஆனால்??

என்னால் உம்மிடம் வர
முடியவில்லை!!

தேடி தேடி அலைந்தாலும் மீண்டும்
அமர முடியாதது!!

தாயின் கருவறை மட்டும் அல்ல!!
எம் மூன்று பக்க நீரும்!!

ஒரு பக்க ஆரோக்கியமான விவசாய
நிலங்களும் தான்!!
மானிடரே!!!



- பா.எழிலரசி,
புவியியல் துறை,
இளங்களை இரண்டாம் ஆண்டு,
அ.வீரைய வாண்டையார் நினைவு ஸ்ரீ
பூஷ்பம் கல்லூரி, பூண்டி.

13-10-2019 அன்று வலங்கைமான் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளில் (Symposium) 40 கல்லூரிகள் கலந்துகொண்டது.

அதில் கொற்கை பல்தொழில்நுட்ப கல்லூரியில் இருந்து ஆசிரியர் வெங்கட்ராமன் அவர்களின் தலைமையில் சென்று கலந்து கொண்ட DEEE பிரிவு மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பரிசுகளை வென்று சிறந்த அணியாக தேர்வு பெற்றனர்.

கலந்துக்கொண்ட மாணாக்கர்களின் விவரம்:
M. ஆதி சக்தி, R. திருமுருகன், M. கரண்குமார், S. சங்கர், S. தமிழரசன், G. சதீஷ், A. சுமன், S. நாராயணசாமிராஜா, V. அருண், M. சுமன். இவர்களில் ஆவண சமர்பிப்பில் M. கரண்குமார், S. சங்கர் இருவரும் முதலிடத்தை பெற்றார்கள். மற்றும் வினாடி வினா போட்டியில் 3ஆம் இடத்தை M. ஆதி சக்தி, R. திருமுருகன் இருவரும் பெற்றார்கள்.






# சித்திரமே

அழகு சித்திரமே
நீ விசித்திரமே
சுவற்றில் சித்திரம்
இரு பரிணாமமாய்
அதன் அருகே நீ
முப்பரிமாண சித்திரமாய்

சித்திரப் பாவையே
பிரம்மன் அழகாய்
பூவுலகில் உன்னை சித்தரித்தான்
பாவைக்குள் அழகாய்
இருவிழிப் பாவை வைத்தான்
பாவையின் பார்வையில்
என்னை கவர வைத்தான்
அதன் அழகில் என்னை
காதலால் வீழ வைத்தான்
பாவை பாவால்
கவி எனும் பாவால்
அழகை புனைய வைத்தான்
அதை அனைவரும்
வியக்கும் வண்ணம்
கவி வெளியிட வைத்தான்

உன் உரு காண்பித்து
அழகே என்னுயிர் கொடுத்தாய்
புன்சிரிப்பு மொழிந்து
.அழகாய் என்னுயிர் பறித்தாய்

சொர்க்கத்தில் சேர்த்துவிட்டாய்
காதல் சொர்க்கத்தில்
என்னை சேர்த்துவிட்டாய்

கவி உலகிலும்
என்னை உள்நுழைத்தாய்
அதில் கருவாய்
நீ மட்டும் ஒருத்தியாய்
கருவாய் அமர்ந்தாய்

அழகு சித்திரமே
என்றும் நீ எனக்கு
புதுமை விசித்திரமே
என் வாழ்வுச் சக்கரத்தின்
நீ தான் இனி அச்சாரமே

சா.கா. பாரதி ராஜா
செங்கற்பட்டு
9944315732, 8610078040

# மாடுலர் கிச்சன்

விதவிதமாய்
சமைக்கும் அம்மா

விறகடுப்பில்
வெந்து போனாள்!

வெளியில் வாங்கி
சாப்பிடும் மனைவிக்கு
வீட்டில் மாடுலர் கிச்சன்!!!

- அன்புக்கரசி
பாலசுப்பிரமணியன்
தலைமை ஆசிரியர் ஓய்வு
மன்னார்குடி

# காவல் தெய்வம்

வகை வகையான
பிள்ளையார்,
தாரை தப்பட்டை முழங்க
வரிசையாய் ஊர்வலம்
ஊர் அதிர
கொண்டாட்டக் களங்கள்
கொலைக்களமாக மாறி விடுமோயென
தவித்திருக்கிறான்
இனங்காத்தத் தலைவன்
ஊருக்கு வெளியே
நடுகல்லாக....!
கோடை வெயிலை..
கொடுங்காற்றை..
பெருமழையை..
தலையில் தாங்கி..!



முனைவர் வ.சிவகுமார்
சுந்தரக்கோட்டை

99763 71747 / vasiva1711gmail.com

--------------------

# உயிர் வலி

கோர பசியின்
கொடுமையால் குப்பைத்தொட்டியில் உணவைத்தேடுபவரின்
நடுங்கும் கரங்கள்..
குழி விழுந்த  கண்கள்
உயிர் வாழ்வதின்
வலியை
உலகிற்கு எடுத்துரைக்கிறது...

# இதுபோதும் இல்லற வாழ்க்கையில்...

காதலித்தபோது கண்ட சோகங்கள் யாவும் வேகமாய் மறந்து போக வேண்டும்...



பெற்றோர் அனுமதி வேண்டி
கெஞ்சி கெஞ்சி தளர்ந்த குரலில்
கொஞ்சி மகிழ்ந்திட வேண்டும்...!

இருவருக்கிடையே சின்ன சின்ன மோதல்
வந்தாலும்
எங்கள் எண்ணமெல்லாம்
காதல் நிறைந்திருக்க வேண்டும்...

எனை பிரிந்தால் அவள் வாட வேண்டும்
–
அவள் சிரிக்க நான் வாழ வேண்டும்..

கவலை மறந்து காலம் கழிக்க
மழலை செல்வம் பெற்றிட வேண்டும் –
அவள் மழலை மொழி சத்தங்களில்
எங்கள் காதலின் அர்த்தங்கள் புரிந்திட வேண்டும்..

--
**மணிபாரதி தங்கசுந்தர்**



**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal Thiravukolmagazine